டெரிக் பிரின்ஸ்

கர்த்தருடைய பந்தியின் வல்லமை

Derek Prince Ministries - India

KARTHARUDAIYA PANTHIYIN VALLAMAI

Printed by Derek Prince Ministries

TAM-POC/3000/0118/LOP

ISBN 978-81-936713-1-3

"THE POWER OF COMMUNION" (Tamil)

Published by permission in the Tamil language.

For orders & other enquiries please contact :

DEREK PRINCE MINISTRIES - INDIA
C/o DPM IMPEX
1C, EVR Road, Puthur,
Trichy - 620 017, Tamil Nadu, India.
E-mail: admin@derekprince.in
Phone : 00-91-98430 55414 / 95855 38201

Derek Prince
MINISTRIES - INDIA

பொருளடக்கம்

முன்னுரை

முதலாவது கர்த்தரின் பந்தி எப்போது நடந்தது ? என்று உங்களிடம் யாராவது கேட்டால், நீங்கள் என்ன பதில் அளிப்பீர்கள் ? அநேகமாக, இயேசுவின் கடைசி இராபோஜனத்தில் தான், அது தான் எல்லாருக்கும் தெரியுமோ என்று பதில் அளிப்பீர்கள்.

பெரும்பாலான கிறிஸ்தவர்கள் உங்களோடு உடன்படுவார்கள். ஆனால் "கர்த்தருடைய பந்தியின் வல்லமை" என்னும் இப்புத்தகத்தில் டெரிக் பிரின்ஸ் அளிக்கும் பதில் உங்களை வியப்பில் ஆழ்த்தலாம்.

இப்புத்தகத்தின் முதல் சில பக்கங்களில் நீங்கள் கற்றுக்கொள்ளுகிற காரியங்கள் உங்களை ஆச்சரியப்பட வைக்கலாம். வேத வசனங்கள் மூலம், இயேசு மற்றும் சீஷர்களின் கடைசி பந்தி தான் அந்த பந்தி நடைபெற்ற முதல் சம்பவம் அல்ல என்று டெரிக் சுட்டிக் காண்பிக்கின்றார். அப்பம் மற்றும் திராட்சரசமாகிய இராபோஜனத்தின் அடிப்படை பொருட்களின் முதல் பரிமாற்றம், ஒரு சரித்திர சம்பவத்தில் பல ஆயிரக்கணக்கான

ஆண்டுகளுக்கு முன் நடந்தது.

இஸ்ரவேலின் தகப்பனாகிய ஆபிராம், வெற்றி பெற்ற ஒரு யுத்தத்தின் விரிவுரையில் இது வருகிறது. அந்நேரத்தில், எருசலேமின் கிழக்கு திசையில் இருந்த மலைகளின் நடுவே அமைந்த ராஜாவின் பள்ளத்தாக்கில், தன்னை சந்திக்க வந்த ஒரு மர்மமான நபரை ஆபிராம் எதிர்கொள்கிறார். அந்த மர்மமான தலைவர் - மெல்கிசேதேக்கு, சாலேமின் ராஜா. ஆனால் உண்மையில் இவர் யார் ?

கர்த்தருடைய பந்தியை குறித்த தமது போதனைக்கு டெரிக் அளித்துள்ள வினோ தமான ஆரம்பம், உங்கள் சிந்தையை கவரும். இப்புதகத்திலுள்ளத் கருப்பொருளின் முழு ஆராய்ச்சியும் அப்படியே செய்யும். ஆதியாகமம் தொடங்கி, மேல்வீட்டறையில் இயேசு மற்றும் சீஷர்களை கொண்ட அந்த நெகிழவைக்கும் காட்சி வரை, டெரிக் நம்மை இராபோஜனமாகிய விலை யேறப்பெற்ற செயலின் ஆழமான ஞானத்திற்குள் கொண்டு செல்லும் ஒரு வேதாகம பயணத்தில் வழிநடத்துவார். இயேசு கட்டளையிட்டபடி, தம்மை கனசுப்படுத்தும்படி நாம் கைக்கொள்ளும் செயல் இது.

இந்த கனத்திற்குரிய செயலின் மறைப்பொருள்களையும், செல்லும் பாதையில் நாம் ஆழமாய் ஆராய்வோம். ஏன் இயேசுவின் மாம்சத்தை புசிக்கவும் அவருடைய இரத்தத்தை பானம் பண்ணவும் நமக்கு கட்டளையிடப்பட்டுள்ளது ?

ஏன் மெல்கிசேதேக்கின் முறைமையின்படி நித்திய ஆசாரியன் என்று இயேசு அழைக்கப்பட்டார் ? நாம் இராபோஜனத்தை உட்கொள்ளும்போது, நம்மில் நடக்கும் மாற்றங்கள் என்ன ?

இவைகளுக்கும், இன்னும் அநேக கேள்விகளுக்கும், பதில்கள் பின் வரும் பக்கங்களில் அளிக்கப்பட்டுள்ளன. கடைசியாக, இந்த புத்தகத்தின் முடிவை நெருங்கும் போது, நிறுத்தி விடாதீர்கள். தொடர்ந்து வாசியுங்கள் ! மிக சிறந்ததை கடைசியில் தான் டெரிக் அளித்துள்ளார். கடைசி சில அத்தியாயங்களில், தனது சொந்த வாழ்கையின் காரியங்களை மிகவும் அபூர்வமான, தனிப்பட்ட, உள்ளத்தை தொடும் விதத்தில் டெரிக் பகிர்ந்துள்ளார். தனது வாழ்வின் மிக கடினமான ஆனால் திருப்தியளிக்கும் நொடிகளிலிருந்து, கர்த்தருடைய பந்தி குறித்து டெரிக் பகிர்ந்துக்கொள்ளும் காரியங்களின் ஊடாக, டெரிக் பிரின்ஸுக்கு இராபோஜனம் என்ன அர்த்தம் கொண்டதாக இருந்ததென்பதை நீங்கள் கண்டறிவீர்கள்.

அளவற்ற வேத பண்டித்துவத்தோடும், ஆழமான தனிப்பட்ட அனுபவங்களோடும், இம்மைய கருத்தை டெரிக் பிரின்ஸ் முன் வைக்கும் விதம், கர்த்தருடைய பந்தியில் நீங்கள் இயேசுவை சந்திக்கும் ஒவ்வொரு முறையும், அவரோடிருக்கும் உங்களது உறவை மிகவும் மேன்மையடையசெய்யும். இந்த ஆச்சரியமான புத்தகத்தை நீங்கள் வாசிக்கும் போது, அவருடைய அளவற்ற அன்பு உங்கள் மீது ஒரு நித்திய மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும்

அத்தியாயம் ஒன்று

ஒரு ஆச்சரியமான ஆரம்பம்

"என்னை நினைவுக்கூறும் படி, இதை செய்யுங்கள்" என்று இயேசு சொன்ன வார்த்தைகள், அவர் சொன்ன மிக அழகான, இருதயத்தை கிழிக்கும் வார்த்தைகளில் ஒன்றாகும். சிலுவையில் அறைப்படும் நாளுக்கு முந்தின நாள் இரவு, தன் சீஷர்களுடன் மேல் வீட்டறையில் அப்பம் பிட்டபோது, இயேசு கூறின வார்த்தைகள் இவை.

பூமியில் இயேசு இருந்த கடைசி சில நாட்களில் அவர் செய்த யாவற்றையும் திட்டமிட்டு, வேண்டுமென்றே செய்தார். நம்முடைய கிறிஸ்தவ விசுவாசத்தின் மிக விலையேறபெற்ற ஒரு முறைமையை அவர் நமக்காக ஏற்படுத்திக் கொண்டிருந்தார். ஆகையால் தான் "கர்த்தருடைய பந்தியின் வல்லமை" என்ற தலைப்பை நான் இந்த புத்தகத்திற்கு தேர்ந்தெடுத்துள்ளேன். இந்த மிக வல்லமையான ஒரு முறைமையை குறித்து, கிறிஸ்தவர்களாகிய நாம், வேதாகமத்திலிருந்து சில எளிய, அடிப்படையான சத்தியங்களை அறிந்துக்கொள்வது அவசியமாகும்.

கிறிஸ்தவர்களுக்குள்ளே, இந்த சடங்கிற்கு பல்வேறு விதமான பெயர்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

இவற்றில் சில, இராபோஜனம், கர்த்தரின் பந்தி, நற்கருணை, திருவிருந்து, கிறிஸ்துவின் பந்தி என்பவைகள் ஆவன. இவையெல்லாம் மிகவும் அழகான பெயர்கள்தான், இதில் எதையும் விட்டுவிட நான் விருப்பப்பட மாட்டேன். இதில் எந்த தலைப்பை நான் பயன்படுத்தினாலும், உங்கள் கலாச்சாரத்தில் நீங்கள் அதற்கு வேறு விதமான பெயரை கொடுத்தாலும், நாம் எல்லாரும் இந்த ஒரே பந்தியை குறித்தே பேசுகிறோம் என்பதை நீங்கள் நினைவில்கொள்ள விரும்புகிறேன்.

ஒரு வியப்பூட்டும் சந்திப்பு

கர்த்தருடைய பந்தியின் வல்லமையை குறித்த எந்த புத்தகமும், இயேசு மற்றும் அவருடைய சீஷர் இருந்த கடைசி பந்தியிலிருந்தே ஆரம்பமாகும் என்றே நீங்கள் முன்முடிவு செய்யலாம். அங்கே தான் இயேசு அப்பம் மற்றும் திராட்சரசமாகிய உடன்படிக்கையின் பொருட்களை ஏற்படுத்தினார். ஆனால் நான் உங்களை ஆச்சரியத்தில் ஆழ்த்தப்போகிறேன்.

இராபோஜனத்தை குறித்த ஆராய்வை நான் ஆதியாகமம் 14:17 - 24லிருந்து துவக்க விரும்புகிறேன். இந்த வசனங்கள் (ஆபிரகாம் என்று இன்னும் பெயர் மாற்றப்படாத) ஆபிராம் மற்றும் பழைய ஏற்பாட்டின் மிக வியப்பூட்டும், மர்மமான கதாப்பாத்திரங்களில் ஒருவரான

மெல்கிசேதேக்கிற்கும் இடையே நிகழ்ந்த ஓர் சந்திப்பு.

இவ்வசனங்களை நாம் பார்க்கும் முன், மெல்கிசேதேக்கு என்ற பெயருக்கு "நீதியின் ராஜா" என்பது அர்த்தமாகுமென்று சுட்டி காண்பிக்க விரும்புகிறேன். அவர் சாலேமின் ராஜா என்றும் கூறப்படுகிறது. சாலேம் என்பது எருசலேமின் மூலப்பெயராகும் (அப்பெயரின் முன் பகுதி பின்பு சேர்க்கப்பட்டது). சாலேம் என்கிற வார்த்தை ஷாலோம் என்ற வார்த்தையுடன் நேரடி தொடர்புடையது. இது சமாதானம் என்ற வார்த்தைக்கான கிரேக்க பதமாகும். ஆகையால், தன் பெயராலே, இந்த மனிதன் நீதியின் ராஜாவாக இருந்தார். அவர் இருந்த இடத்தினாலே, அவர் சமாதானத்தின் ராஜாவாகவும் இருந்தார்.

மெல்கிசேத்தேக்கை குறித்து எபிரெயரின் நிருபத்தில் அதிகம் கூறப்பட்டிருந்தாலும், முடிவிலே அவர் ஒரு மர்மமான, அறிந்துக்கொள்ள முடியாத நபராகவே திகழ்கின்றார். ஆதியாகமம் 14ல் ஏற்பட்ட இந்த தோற்றம், ஒரு கிறிஸ்டாஃபனி என அநேகர் நம்புகிறார்கள். அப்படியென்றால், கிறிஸ்துவின் ஒரு முன் அவதாரம் என்று அர்த்தமாகும். மற்ற வர்கள் வேறு விதமாக நம்புகிறார்கள். ஒரு முன்னெச்சரிக்கையுள்ள அரசியல்வாதி இப்படி சொன்னாராம், "என்னுடைய நண்பர்களில் சிலர் அதை நம்புகிறார்கள், வேறு சிலர் அதை

எதிர்கிறார்கள் - நான் என் நண்பர்களுடன் நிற்கிறேன்" என்றாராம். வேறு வார்த்தைகளில் சொன்னால், இது ஒரு கிறிஸ்டாஃபனியா இல்லையா என்பதை குறித்து, யார் சரி யார் தவறு என்பது எனக்கு தெரியாது.

அது மாத்திரம் அல்ல, நாம் ஆராய இருக்கின்ற பகுதியின் 18ம் வசனத்தில், வேதாகமத்திலேயே முதல் முறையாக ஆசாரியன் என்ற வார்த்தை பயன்படுத்தப்படுவதை நாம் காண்கிறோம். ஆசாரியன் என்ற வார்த்தையும், ஆசாரியத்துவம் என்ற கருத்தும், வேதாகமம் முழுவதிலும் காணப்படும் மிக பெரிய கருப்பொருள்களில் ஒன்றாகும். பொதுவான கோட்பாடாக எடுத்துக்கொண்டால், ஒரு மைய கருத்து முதல் முறையாக வேதாகமத்தில் முன் வைக்கப்படும்போது, அதுவே அக்கருத்திலிருந்து பின்பு வரக்கூடிய எல்லா சத்தியத்திற்கும் வித்தாக அமையும். இது ஆசாரியன் என்ற வார்த்தையின் முதல் பிரயோகத்தை குறித்து உண்மை என்று நம்புகிறேன்.

கர்த்தருடைய பந்தியின் கருப்பொருளை இந்த பகுதியை கொண்டு ஏன் அறிமுகம் செய்கிறீர்கள் ? என்று நீங்கள் கேட்கலாம். மெல்கிசேதேக்குக்கும் ஆபிராமுக்கும் ஏற்பட்ட இந்த முதல் சந்திப்பில், மெல்கிசேதேக்கு ஆபிராமுக்கு இராபோஜன பந்தியில் வைக்கப்படும் அதே பொருட்களாகிய

அப்பத்தையும் திராட்சரசத்தையும் கொடுத்தார் என்பதை நான் சுட்டி காண்பிக்க விரும்புகிறேன்.

சாலேமுக்கு எதிராக சோதோம்

இந்த சுருக்கமான பின்னணியுடன், ஆதியாகமம் 14ல் உள்ள வசனங்களுக்கு நம்முடைய கவனத்தை திருப்புவோம். ஆபிராம் தன் உடன் பிறந்த சகோதரனின் மகனாகிய லோத்தையும் அவன் குடும்பத்தையும், அவர்களை யுத்தத்தில் சிறைப்பிடித்தவரின் கரத்திலிருந்து அப்போதுதான் விடுவித்திருந்தார். சிறைப்பிடிக்கப்பட்டிருந்த மக்கள் மற்றும் பொருட்களும் விடுவிக்கப்பட்டன. சில ராஜாக்களின் ஒரு ராணுவ கூட்டணி, சோதோமின் மேல் படையெடுத்தனர். ஆபிராமும், அவனுடைய மனிதரும் கெதர்லாகோமோரையும் அவனுடன் இருந்த ராஜாக்களையும் முறியடித்தபோது, அவர்கள் தோல்வியுற்று யுத்தக்களத்தை விட்டு ஓடிபோனார்கள்.

இந்த சம்பவத்தை நாம் 17ம் வசனத்திலிருந்து தொடர்ச்சியாக பார்ப்போம்:

அவன் கெதர்லாகோமோரையும், அவனோடிருந்த ராஜாக்களையும் முறியடித்துத் திரும்பிவருகிறபோது, சோதோமின் ராஜா புறப்பட்டு, ராஜாவின் பள்ளத்தாக்கு என்னும் சாவே பள்ளத்தாக்குமட்டும் அவனுக்கு

எதிர்கொண்டுபோனான். அன்றியும் உன்னதமான தேவனுடைய ஆசாரியனாயிருந்த சாலேமின் ராஜாவாகிய மெல்கிசேதேக்கு அப்பமும் திராட்சரசமும் கொண்டுவந்தான்.

ஆதியாகமம் 14:17-18

வெற்றியின் மிக முக்கியமான இந்த நொடியில் ஆபிராம் இரண்டு ராஜாக்களால் சந்திக்கப்படுவதை நீங்கள் கவனிக்க விரும்புகிறேன்: சாலேமின் ராஜாவாகிய மெல்கிசேதேக்கு மற்றும் சோதோமின் ராஜா. இந்த இரண்டு ராஜாக்களும், மிகவும் வித்தியாசமான கண்ணோட்டம் மற்றும் மிகவும் வித்தியாசமான முடிவுகளுடைய இரண்டு பட்டணங்களின் ராஜாக்களாய் இருந்தனர். இந்த காட்சி முன்னேற்றம் அடைய, ஆபிராம் திடீரென்று ஒரு முடிவெடுக்க வேண்டிய சூழலை எதிர்கொள்கிறார். ஒரு விதத்தில், இந்த இரண்டு ராஜாக்களுக்கும் இடையே அவர் தேர்வு செய்ய வேண்டியதாயிற்று.

18ம் வசனத்தை மறுபடியும் வாசித்து, அதிலிருந்து தொடருவோம்:

அன்றியும், உன்னதமான தேவனுடைய ஆசாரியனாயிருந்த சாலேமின் ராஜாவாகிய மெல்கிசேதேக்கு அப்பமும் திராட்சரசமும் கொண்டுவந்து, அவனை ஆசீர்வதித்து: வானத்தையும் பூமியையும்

உடையவராகிய உன்னதமான தேவனுடைய ஆசீர்வாதம் ஆபிரகாமுக்கு உண்டாவதாக. உன் சத்துருக்களை உன் கையில் ஒப்புக்கொடுத்த உன்னதமான தேவனுக்கு ஸ்தோத்திரம் என்று சொன்னான். இவனுக்கு ஆபிராம் எல்லாவற்றிலும் தசமபாகம் கொடுத்தான். சோதோமின் ராஜா ஆபிராமை நோக்கி: ஜனங்களை எனக்கு தாரும். பொருள்களை நீர் எடுத்துக்கொள்ளும் என்றான். (வசனங்கள் 18 - 21)

வேறு வார்த்தைகளில் சொன்னால், "நீர் என்னையும், என் ஜனங்களையும், என் எல்லா உடைமைகளையும் மீட்டுக்கொடுத்துள்ளீர். நிச்சமாக இதற்கு பதிலாக ஏதாகிலும் எதிர்ப்பார்ப்பீர். என் ஜனங்களை மட்டும் நான் தக்க வைத்துக்கொண்டால் எனக்கு திருப்தியாய் இருக்கும். என் சார்பில், நீர் கொள்ளையாக கொண்டு வந்த எல்லா பொருட்களையும் நீர் வைத்துக்கொள்ளும்." என்று சோதோமின் ராஜா கூறுகிறார்.

அதற்கு, ஆபிராம் சோதோமின் ராஜாவைப் பார்த்து: ஆபிராமை ஐசுவரியவானாக்கினேன் என்று நீர் சொல்லாதபடிக்கு,நான் ஒருசரட்டையாகிலும் பாதரட்சையின் வாரையாகிலும், உமக்கு

உண்டானவைகளில் யாதொன்றை யாகிலுமெடுத்துக்கொள்ளேன் என்று, வானத்தையும் பூமியையும் உடையவராகிய உன்னதமான தேவனாகிய கர்த்தருக்கு நேராக என் கையை உயர்த்துகிறேன். வாலிபர் சாப்பிட்டதுபோக, என்னுடன் வந்த ஆநேர், எஸ்கோல், மம்ரே என்னும் புருஷருடைய பங்கு மாத்திரம் வர வேண்டும்; இவர்கள் தங்கள் பங்கை எடுத்துக்கொள்ளட்டும் என்றான். (வசனங்கள் 22 - 24)

ஆபிராம், சோதோமின் ராஜாவிடம் "உன்னிடத்திலிருந்து எனக்கு ஒருபோதும் ஒன்றும் தேவையில்லை" என்று மிகுந்த உறுதியுடன் சொன்னான். சோதோமின் ராஜா தனக்கு கொடுத்ததை, வேண்டாம் என்று நிராகரித்தான். அதற்கு பதிலாக மெல்கிசேதேக்கு தமக்கு கொடுத்ததை ஏற்றுக்கொண்டான். இது ஒரு முக்கிய கோட்பாட்டின் சுருக்கமான பார்வை. இதை நான் பின்பு விரிவாக சொல்லுவேன், ஏனென்றால் நாமும் அந்த தேர்வை செய்ய வேண்டியதாக இருக்கும். தற்பொழுது, நம்முடைய கதையில் உள்ள மற்ற ராஜாவை நான் உற்றுப்பார்க்க விரும்புகிறேன் - அவர் தான் மெல்கிசேதேக்கு - சாலேமின் ராஜாவும் உன்னதமான தேவனுடைய ஆசாரியனுமானவன்.

அத்தியாயம் 2

என்றென்றுமுள்ள ஒரு ஆசாரியன்

ஆபிராம் மற்றும் மெல்கிசேதேக்கிற்கும் இடையில் நிகழ்ந்த ஒரு வியத்தகு சந்திப்பை கொண்டு, கிறிஸ்துவின் பந்தியை குறித்த இந்த புத்தகத்தை நாம் துவக்கி இருக்கிறோம். அவர் பழைய ஏற்பாட்டின் மிக மர்மமான நபர் மட்டுமல்ல, கிறிஸ்துவின் ஒரு முன் அவதாரமாக வந்தவர் என்று அநேகரால் நம்பப்படுகிறார். ஆதியாகமம் 14:18ல் அவர் "உன்னதமான தேவனுடைய ஆசாரியன்" என்று அழைக்கப்படுகிறார். நான் சுட்டி காண்பித்தது போல, இது தான் வேதாகமத்தில், முதன் முதலில் ஆசாரியன் என்ற பதம் பயன்படுத்தப்பட்ட இடம். ஆசாரியத்துவம் என்ற கருத்தும் இங்கு தான் அறிமுகமாகிறது.

ஆதியாகமத்தில் நாம் மேற்கோள்காட்டிய சம்பவத்திலிருந்து, இது வரை நாம் மெல்கிசேதேக்கை குறித்து வெகு குறை வாகவே கற்றுக்கொண்டுள்ளோம். ஆனால், புதிய ஏற்பாட்டிலுள்ள எபிரெயர் 7ம் அதிகாரம், மெல்கிசேதேக்கின் ஆசாரியத்துவத்தின் ஒப்பற்ற தன்மையை குறித்து வெகுவாக விவரிக்கிறது. முக்கியமாக, இயேசு கிறிஸ்துவும் ஆசாரியன் தான்

என்பதை அது உறுதி செய்கிறது - லேவியின் முறைமையின் படியான ஆசாரியன் அல்ல, மாறாக, அவர் மெல்கிசேதேக்கின் முறைமையின் படி ஆசாரியனானவர்.

எபிரெயர் 7:17, இதை தெளிவாக கூறுகிறது: நீர் மெல்கிசேதேக்கின் முறைமையின்படி என்றென்றைக்கும் ஆசாரியராயிருக்கிறீர் என்று சொல்லிய சாட்சிக்குத்தக்கதாக அழியாத ஜீவனுக்குரிய வல்லமையின்படியே ஆசாரியரானார்.

இரண்டு வெவ்வேறான ஆசாரியத்துவங்கள்

எபிரெயரின் எழுத்தாளர் மெல்கிசேதேக்கின் ஆசாரியத்துவத்திற்கும், லேவியின் ஆசாரியத்துவத்திற்கும் பல்வேறு தெளிவான வேற்றுமைகளை விவரிக்கின்றார். ஆனால் இந்த பகுதியில் நான் வலியுறுத்த விரும்புவது என்னவென்றால், மெல்கிசேதேக்கின் ஆசாரியத்துவமே, எல்லாவற்றிலும் முதன்மையான ஆசாரியத்துவம், எல்லா ஆசாரியத்துவங்களுக்கும் அது முன்மாதிரியானது. அது ஒரு மேலான ஆசாரியத்துவம். 500 ஆண்டுகளுக்கு பின் மோசேயின் நியாயப்பிரமாணத்தின் கீழ் அறிமுகம் செய்யப்பட்ட லேவியின் ஆசாரியத்துவம், ஒரு தாழ்வான ஆசாரியத்துவம்.

லேவியின் ஆசாரியத்துவத்தின் வழிமுறை

களை நீங்கள் ஆராய்ந்து பார்த்தால், லேவியரான ஆசாரியர்கள், தேவனுடைய ஜன ங்கள் கொண்டு வந்து கொடுத்தவைகளில் சிலவற்றையே ஜனங்களுக்கு திரும்ப தந்தனரேயன்றி, தாமாக ஜனங்களுக்கு கொடுக்க, அவர்களிடத்தில் ஒன்றுமில்லை. ஆனால் ஆபிராம் மெல்கிசேதேக்கிற்கு முன்பு ஒரு போதும் கொடுக்காத ஒன்றை, மெல்கிசேதேக்கு ஆபிராமுக்கு அளித்தார் - அப்பமும் திராட்சரசமும்.

இந்த ஆசாரியத்துவங்களில் இன்னொரு வேற்றுமையையும் காண்கிறோம். லேவியின் முறையில் வந்த ஆசாரியர்கள், தங்கள் வாழ்நாட்கள் வரை தான் அந்த ஆசாரியத்துவத்தில் நிலைத்திருந்தனர். எபிரெயர் 7:23 இதை இப்படி கூறுகிறது: அன்றியும், அவர்கள் மரணத்தினிமித்தம் நிலைத்திருக்கக்கூடாதவர்களானபடியால், ஆசாரியராக்கப்படுகிறவர்கள் அநேகராயிருக்கிறார்கள்.

நியாயப்பிரமாணத்தின் கீழ், ஒவ்வொரு வருடமும், திரும்ப திரும்ப அதே பலிகளை செலுத்தும் ஆசாரியர்கள் அநேகர் தேவைப்பட்டனர். அவர்கள் இந்த சேவையை, தங்களுக்காகவும் ஜன ங்களுக்காகவும் செய்தனர். அவர்கள் செலுத்தின பலிகள் பாவத்தை முழுவதும் அல்லது பூரணமாக பரிகாரம் செய்ய போதுமானவைகள் அல்ல.

ஆனால், எபிரெயர் 7:26-27 ஒரு மேலான ஆசாரியத்துவத்தை குறித்து விவரிக்கின்றது.

பரிசுத்தரும், குற்றமற்றவரும், மாசில்லாதவரும், பாவிகளுக்கு விலகினவரும், வானங்களிலும் உயர்ந்தவருமாயிருக்கிற இவ்விதமான பிரதான ஆசாரியரே நமக்கு ஏற்ற வராயிருக்கிறார். அவர் பிரதான ஆசாரியர்களைப்போல முன்பு சொந்தப் பாவங்களுக்காகவும், பின்பு ஜன ங்களுடைய பாவங்களுக்காகவும் நாடோறும் பலியிடவேண்டுவதில்லை; ஏனெனில் தம்மைத்தாமே பலியிட்டதினாலே இதை ஒரேதரம் செய்துமுடித்தார்.

ஒரே நித்திய பலி

மெல்கிசேதேக்கின் முறைமையின் படி பிரதான ஆசாரியன் என்று இயேசுவை குறித்து பேசும் போது, அவர் பாவத்திற்காக ஒரே பலியை செலுத்தின பின் உன்னதமான தேவனுடைய வலது பாரிசத்தில் உட்கார்ந்திருக்கிறார் என்று எபிரெயரின் எழுத்தாளர் கூறுகிறார்.

மேற்சொல்லியவைகளின் முக்கியமான பொருளென்னவெனில், பரலோகத்திலுள்ள மகத்துவ ஆசனத்தின்

வலதுபாரிசத்திலே உட்கார்ந்திருக்கிற வருமாய்.... (எபிரெயர் 8:1)

லேவி முறைமையில் வந்த ஆசாரியர்கள் எப்போதும் நின்று கொண்டுதான் இருந்தனர்; அவர்கள் உட்காரவில்லை. இயேசுவோ, மெல்கிசேதேக்கின் முறைமையில் வந்த ஆசாரியன். அவர் தம்மையே சிலுவையில் பலியாக ஒப்புக்கொடுத்த பின், உட்கார்ந்தார். இதில் வேற்றுமையை காண்கிறீர்களா ? அவர்கள் நின்றார்கள்; இவர் உட்கார்ந்தார்.

இதற்கு அர்த்தம் என்ன ? தங்கள் வேலை ஒரு போதும் நிறைவடையாததால், லேவியரான ஆசாரியர்கள் நின்றார்கள். இறுதி பலியை அவர்களால் ஒருபோதும் செலுத்தமுடியவில்லை. இதற்கு எதிரிடையாக, இயேசு உட்கார்ந்தார் - ஏனென்றால் அவர் பாவத்திற்காக ஒரே நிரந்தர பலியை செலுத்தினார். அதற்கு பின் வேறு பலியை செலுத்த வேண்டிய அவசியம் அவருக்கு இல்லை.

ஆகவே, லேவியரின் ஆசாரியத்துவம் ஒரு தற்காலிக ஆசாரியத்துவம் என்று காண்கிறோம். ஆனால் இயேசுவின் ஸ்தானமோ ஒரு நித்திய ஆசாரியத்துவம். பாவத்திற்கு முடிவை கொண்டு வரும் விதத்தில் செயலாற்றாத அநேக பலிகளை அவர்கள் செலுத்தினார்கள். ஆனால் இயேசு பாவத்திற்காக செலுத்தின ஒரே பலி, பாவத்தை

என்றென்றைக்கும் பரிகரித்த படியினால், அதை மறுபடியும் செலுத்த தேவை இல்லாமல் போயிற்று. அவர்கள் நின்றார்கள். ஆனால் இயேசு உட்கார்ந்தார் - முன் ஒரு போதும் அவருக்கு காணிக்கையாக செலுத்த படாத ஒன்றை அவர் நமக்கு அளித்தார்.

லேவியின் ஆசாரியத்துவம் மற்றும் அவர்களுடைய காணிக்கைக்கும், தனது நித்திய ஆசாரியத்துவத்தின் நிமித்தம் இயேசு செலுத்தின ஒரே, போதுமான, நிரந்திர பலிக்கும் உள்ள தெளிவான வித்தியாசத்திற்கு நாம் தொடர்ந்து கவனம் செலுத்துவோம்.

அத்தியாயம் 3

ஆழ்ந்து சிந்திக்கவைக்கும் ஒரு இராபோஜனம்

இந்த சிறிய அத்தியாயத்தில், இது வரை ஆராய்ந்த வசனங்களில் கண்டெடுத்த யாவற்றையும், புதிய ஏற்பாட்டிலுள்ள இராபோஜனத்தின் சம்பவத்தோடு நான் இணைக்க விரும்புகிறேன். ஆதியாகமம் 14ல், ஆபிராம் "உன்னதமான தேவனுடைய ஆசாரியனாகியா மெல்கிசேதேக்குடன் சந்திக்கும் சம்பவத்தில் நமது ஆராய்வை ஆரம்பித்தோம். அதற்கு பின் இதன் தொடர்ச்சியை சங்கீதத்தில் எடுத்தோம். அங்கே தாவீது, அந்த சந்திப்பை மேசியாவை குறித்ததான வார்த்தைகள் கொண்டு மேற்கோள் காட்டுகிறார்: " நீர் மெல்கிசேதேக்கின் முறைமையின் படி என்றெ ன்றைக்கும் ஆசாரியராயிருக்கிறீர் (சங்கீதம் 110:4). அதற்கு பின், லேவியின் ஆசாரியத்துவத்தை குறித்தே அறிந்திருந்த யூதர்களுக்காக, எபிரெயரின் எழுத்தாளர் மெல்கிசேதேக்கின் இந்த நித்திய ஆசாரியத்துவத்தை விளக்கி எழுதுகிறதை பார்த்தோம்.

இப்படிப்பட்ட அஸ்திபாரத்தை போட்டபின், நமது கவனத்தை மத்தேயு 26க்கு திருப்புவது நலமாயிருக்கும் - இது கர்த்தரின் பந்தியை

குறித்ததான ஒரு விரிவுரை. இது வரை நான் உங்களுடன் பகிர்ந்துக்கொண்டவைகளின் வெளிச்சத்தில், சில வாழ்வை மாற்றியமைக்கும் சத்தியங்கள் உங்களுக்கு உடனடியாக வெளியாகும் என்பதே எனது நம்பிக்கை. மத்தேயு 26:26-29ஐ நாம் வாசிப்போம். இங்கு, கடைசி இராபந்தியில், இயேசு இராபோஜனத்தின் முறைமையை ஏற்படுத்தியது விவரிக்கப்படும். நீங்கள் இதற்கு என்ன பெயர் கொடுத்தாலும் சரி - கர்த்தரின் பந்தி, கடைசி இராபந்தி, நற்கருணை, திருவிருந்து அல்லது இராபோஜனம் - என்னவென்று அழைத்தாலும், இந்த வசனங்கள் வேதத்திலேயே மிகவும் சிந்திக்கவைக்கும் நொடிகளில் ஒன்றை சித்தரிக்கின்றன.

அவர்கள் போஜனம்பண்ணுகையில், இயேசு அப்பத்தை எடுத்து, அசீர்வதித்து, அதை பிட்டு, சீஷர்களுக்கு கொடுத்து: நீங்கள் வாங்கிப் புசியுங்கள், இது என்னுடைய சரீரமாயிருக்கிறது என்றார். பின்பு, பாத்திரத்தையும் எடுத்து, ஸ்தோத்திரம்பண்ணி, அவர்களுக்கு கொடுத்து: நீங்கள் எல்லாரும் இதிலே பானம்பண்ணுங்கள்; இது பாவமன்னிப்புண்டாகும்படி அநேகருக்காகச் சிந்தப்படுகிற புது உடன்படிக்கைக்குரிய என்னுடைய இரத்தமாயிருக்கிறது. இதுமுதல் இந்தத் திராட்சப்பழரசத்தை நவமானதாய் உங்களோடேகூட என் பிதாவின் ராஜ்யத்திலே

நான் பானம்பண்ணும் நாள் வரைக்கும் இதைப் பானம் பண்ணுவதில்லையென்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார். மத்தேயு 26: 26-29

முதல் ஆசாரியத்துவத்தின் மறுதோற்றம்

இயேசு அப்பத்தையும் திராட்சரசத்தையும் எடுத்து, அவைகளை தன் சீஷர்களுக்கு கொடுத்ததில் என்ன அர்த்தம் இருந்தது ? அவர்களிடம் அவர் என்ன சொல்ல விரும்பினார் ? "என்னில் மெல்கிசேதேக்கின் ஆசாரியத்துவம் மறுதோற்றம் அடைவதை காண்கிறீர்கள். நியாயப்பிரமாணம் உடன்படிக்கையாய் இருந்த காலத்தில் அது செயல்படாமல் இருந்தது. இப்போது, புதிய உடன்படிக்கையில் மெல்கிசேதேக்கின் ஆசாரியத்துவம் மறுபடியும் நிலைநிறுத்தப்படுகிறது" என்று அவர் தம் செயலினால் கூறினார்.

இதில் சுவாரசியமான காரியம் என்னவென்றால், நான் ஏற்கெனவே சுட்டி காண்பித்தது போல், மெல்கிசேதேக்கு ராஜாவாகவும் ஆசாரியனாகவும் இருந்தார். ஆனால் மோசேயின் நியாயப்பிரமாணத்தின் கீழ், ராஜாவின் ஆளுகையும் ஆசாரியத்துவமும் தனி தனியாக பிரிந்திருந்தன - அவைகளை சேர்க்கக்கூடாமலும் இருந்தது. இதேனென்றால், ஆசாரியர்கள் லேவியின் கோத்திரத்திலிருந்து வர வேண்டியது அவசியமாயிருந்தது, ராஜாக்களோ யூதாவின்

கோத்திரத்திலிருந்து வர வேண்டியதாயிருந்தது. ஒரு ராஜா ஒருபோதும் ஆசாரியனாக இருக்கவும் முடியாது - ஒரு ஆசாரியன் ஒருபோதும் ராஜாவாக இருக்கவும் முடியாது. இவ்வேற்றுமை, லேவியின் ஆசாரியத்துவத்தின் தாழ்வை குறிக்கும் இன்னொரு அறிகுறியாக இருக்கிறது.

ஆனால், கடைசி இராபந்தியின் போது, இயேசு எழுந்து நின்று அப்பத்தையும் திராட்சரசத்தையும் கொண்டு வந்தபோது, இதெல்லாம் மாறிற்று. இயேசு, "மோசேயின் நியாயப்பிரமாணத்தின் காலம் வரை இடைநீக்கம் செய்யப்பட்டிருந்த மெல்கிசேதேக்கின் ஆசாரியத்தும் இதோ. எனக்குள் இது மறுபடியும் நிலைநிறுத்தப்படுகிறது - லேவியின் முறைமையின்படி அல்ல - மெல்கிசேதேக்கின் முறைமையின்படியே" என்று அந்த செயலினால் கூறினார்.

அந்த கடைசி இராபந்தியில், அப்பத்தையும் திராட்சரசத்தையும் அளித்த தமது செயலினால், இயேசு தம்முடைய இரத்தத்தில் புதிய உடன்படிக்கையை ஏற்படுத்தினார். பாத்திரத்தை எடுத்த போது, "இது பவமன்னிப்புண்டாகும்படி அநேகருக்காகச் சிந்தப்படுகிற புது உடன்படிக்கைக்குரிய என்னுடைய இரத்தமாயிருக்கிறது" என்று கூறினார்.

இது தான், வேதாகமத்திலிருந்து கர்த்தருடைய

பந்தியை குறித்ததான பின்னணி. அது மெல்கிசேதேக்கின் ஆசாரியத்துவத்தை மறுபடியும் நிலைநிறுத்துவதாகும் - இதுவே உன்னதமான ஆசாரியத்துவம், முதன்மையான ஆசாரியத்துவம். மேலும், இயேசு தம்முடைய சீஷர்களுக்கு அளித்த பொருட்கள், மெல்கிசேதேக்கு, ஆபிராமுக்கு அளித்த அதே பொருட்களாக இருந்தன. இராபோஜனத்தின் மூலம், இயேசு மெல்கிசேதேக்கின் ஆசாரியத்துவத்தை மறுபடியும் நிலைநாட்டினார். அது மட்டுமல்ல, நாம் கர்த்தருடைய பந்தியில் பயன்படுத்தும் பரிசுத்தமான பொருட்களையும் திரும்ப ஏற்படுத்தினார். பின் வரும் அத்தியாயங்களில், அந்த மறு நிலைநாட்டலின் முக்கியத்துவத்தை நாம் கண்டடைவோம்.

அத்தியாயம் 4

இராபோஜனத்தின் ஏழு அம்சங்கள்

ஆதியாகமத்தின் புத்தகத்தில், ஆபிராமுக்கும் மெகிசேதேக்குக்கும் இடையே ஏற்பட்ட சந்திப்பு, நம்முடைய மீட்பிற்காக தேவன் வைத்திருந்த அற்புதமான திட்டத்தின் ஒரு சுருக்கமான, தீர்க்கதரிசனமான பார்வையை அளித்தது. மெல்கிசேதேக்கு ஆபிராமுக்கு அளித்த அப்பமும் திராட்சரசமும், இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு பின், தனது சிலுவை மரணத்திற்கு முந்தின இரவு இயேசு ஏற்படுத்தின இராபோஜனத்தின் முன் அடையாளங்களாக இருந்தன.

இவைகள் சிலுவை மரணத்தின் சின்னங்களாகவும் இருந்தன: அப்பம், அவருடைய சரீரம்; திராட்சரசம்: அவருடைய இரத்தம். இச்சின்னங்களை கொண்டு, இயேசு தமது இரத்தத்தில் புதிய உடன்படிக்கையை இயற்றி, மெல்கிசேதேக்கின் ஆசாரியத்துவத்தை மறுபடியும் நிலைநாட்டினார். அந்த கடைசி இராபந்தியின் இரவில், நமது இரட்சகர், நமக்கு ஒரு அழகான, புனிதமான முறைமையை ஏற்படுத்தி, ''என்னை நினைவுக்கூறும்படி இதை செய்யுங்கள்'' என்று அறிவுறுத்தினார்.

இந்த இராபோஜனத்தில் பங்கேற்பதை குறித்து, புதிய ஏற்பாடு நமக்கு என்ன கற்றுத்தருகிறது ? வேதம் கர்த்தருடைய பந்தியின் ஏழு அம்சங்களை எவளிப்படுத்துகிறது: மூன்று அம்சங்கள் கிறிஸ்துவுடன் இருக்கும் நமது உறவை குறித்து பேசுகின்றன, மூன்று அம்சங்கள் கிறிஸ்துவின் சரீரத்தோடு நமக்கு இருக்கும் உறவை குறித்து பேசுகின்றன, ஒன்று உலகத்தோடிருக்கும் நம்முடைய உறவை குறித்து பேசுகிறது. இப்புத்தகத்தில் பின் வரும் அத்தியாயங்களில் இந்த ஏழு அம்சங்களை நாம் ஆராய்வோம்.

நமது ஆராய்வின் அப்பகுதியை துவங்கும் முன், 1 கொரிந்தியர் 10 மற்றும் 11 அதிகாரங்களிலிருந்து இரண்டு கோட்பாடுகளை நான் முக்கியப்படுத்தி காண்பிக்க விரும்புகிறேன். இவ்வேதப்பகுதிகள் பின் வரும் பகுதிக்கு அடிப்படையாக அமையும்.

பகிர்ந்துகொள்ளுதல் மற்றும் பங்கேற்றல்

நாம் 1 கொரிந்தியர் 10:14ல் ஆரம்பம் செய்வோம். இங்கு பவுல் கொரிந்து பட்டணத்தின் கிறிஸ்தவர்கள் எத்தகைய உணவை உட்கொள்ள அனுமதிக்கப்பட வேண்டும் என்ற விஷயத்தை முன்னிட்டு பேசுகிறார் என்பதை மனதில் கொள்ளுங்கள். இங்கு கேள்வி இதுதான்: விக்கிரக கோயில்களுடன் இணைந்திருந்த கசாப்பு

கடைகளில் விற்கப்படும் உணவை கிறிஸ்தவர்கள் உண்ணலாமா ? இது தான் கேள்வியாக இருந்தது - இந்த விஷயத்திற்கு பதில் அளிக்கும் பவுல், கர்த்தருடைய பந்தியை குறித்து நமக்கு சில பாடங்களை முன்வைக்கிறார்.

ஆகையால் எனக்குப் பிரியமானவர்களே, விக்கிரகாராதனைக்கு விலகி ஓடுங்கள். உங்களை புத்திமான்களென்று எண்ணிப் பேசுகிறேன்; நான் சொல்லுகிறதை நீங்களே நிதானித்துப்பாருங்கள். நாம் ஆசீர்வதிக்கிற ஆசீர்வாதத்தின் பாத்திரம் கிறிஸ்துவினுடைய இரத்தத்தின் ஐக்கியமாயிருக்கிறதல்லவா ? நாம் பிட்கிற அப்பம் கிறிஸ்துவினுடைய சரீரத்தின் ஐக்கியமாயிருக்கிறதல்லவா ? (1 கொரிந்தியர் 10:14 - 16)

இங்கு ஐக்கியம்ா என்று மொழிப்பெயர்க்கப்பட்டுள்ள வார்த்தைக்கு கிரேக்கத்தில் "கொய்னோனியாா என்று சொல்லப்படுகிற வார்த்தையாகும். ஆங்கில கிங் ஜேம்ஸ் வேதாகமத்தில், இதை கம்யூனியன்" என்று மொழிப்பெயர்த்துள்ளர்கள் - இதற்கு அர்த்தம்ாஏதோ ஒன்றை பொதுவாக அனுபவிப்பதுா என்பதாகும். ஆகவே, நாம் அப்பத்திலும் திராட்சரசத்திலும் பங்கேற்கும் போது, மற்ற விசுவாசிகளுடன் நமக்கு பொதுவாக இருக்கக்கூடிய ஒன்றை நாம் பகிர்ந்துக்கொள்ளுகிறோம் என்பதை அங்கிகரித்து,

உறுதி செய்கிறோம்.

அந்த ஒரே அப்பத்தில் நாமெல்லாரும் பங்குபெறுகிறபடியால், அநேகரான நாம் ஒரே அப்பமும் ஒரே சரீரமுமாயிருக்கிறோம். (17ம் வசனம்)

இப்பந்தியின் இன்னொரு பகுதி என்னவென்றால், நாம் எல்லாரும் கிறிஸ்துவின் சரீரத்தில் பங்கேற்கிறோம். நம்மெல்லாருக்கும் கிறிஸ்துவின் சரீரத்தில் ஒரு தனிப்பட்ட பங்கு உண்டு - நாம் கிறிஸ்துவின் சரீரத்தை ஒருவரோடொருவர் பகிர்ந்துக்கொள்ளவும் செய்கிறோம்.

இப்படியிருக்க, விக்கிரகம் ஒரு பொருளென்றும், விக்கிரகத்துக்குப் படைக்கப்பட்டது ஒரு பொருளென்றும் நான் சொல்லுகிறேனோ ? அஞ்ஞானிகள் பலியிடுகிறவைகளை தேவனுக்கு அல்ல, பேய்களுக்கே பலியிடுகிறார்களென்று சொல்லுகிறேன்; நீங்கள் பேய்களோடே ஐக்கியமாயிருக்க எனக்கு மனதில்லை. நீங்கள் கர்த்தருடைய பாத்திரத்திலும் பேய்களுடைய பாத்திரத்திலும் பானம்பண்ணக்கூடாதே; நீங்கள் கர்த்தருடைய போஜனபந்திக்கும் பேய்களுடைய போஜனபந்திக்கும் பங்குள்ளவர்களாயிருக்கக்கூடாதே. (வசனங்கள் 19 - 21)

வேறு வார்த்தைகளில் சொன்னால், இங்கு விவாதத்திற்குறிய ஆகாரமானது, பிசாசுகளின்

ஆராதனையோடு சம்பந்தப்பட்டது, ஏனென்றால் இந்த விக்கிரகங்கள் பேய்களுடைய விக்கிரகங்களாக இருந்தன. அந்த கோயில்களின் கடைகளில் விற்கப்படும் உணவும் அந்த பேய்களுக்கே பலியிடப்பட்டிருந்தது.

மெல்கிசேதேக்கா சோதோமா?

1 கொரிந்தியரில் இராபோஜனத்தை குறித்து சொல்லப்பட்ட இவ்வசனங்களை, ஆதியாகமத்தில் வாசித்த பகுதியுடன் இணைத்தால், இதே விஷயத்தை தான் ஆபிராமும் எதிர்கொள்ள வேண்டியதிருந்தது என்று காண்கிறோம். இராஜாவின் பள்ளத்தாக்கில், மெல்கிசேதேக்கு ஆபிராமை சந்தித்த போது, மெல்கிசேதேக்கு தமக்கு அளித்த பொருட்களுக்கும், சோதோமின் ராஜா அளித்தவைகளுக்கும் இடையே, ஆபிராம் தேர்வு செய்ய வேண்டியதாயிருந்தது. அவருடைய மனச்சாட்சி, இரண்டிலும் பங்கேற்க முடியாதென்று எப்படியோ அவரை உணர்த்தியது. நாமும் அப்படி செய்ய முடியாது.

21ம் வசனத்திலிருந்து 22 வரை மறுபடியும் கூறி, 1 கொரிந்தியர் 10ஐ ஆராய்வதை முடிவுக்கு கொண்டு வருவோம்.

> *நீங்கள் கர்த்தருடைய பாத்திரத்திலும் பேய்களுடைய பாத்திரத்திலும் பானம்பண்ணக்கூடாதே; நீங்கள்*

கர்த்தருடைய போஜனபந்திக்கும் பேய்களுடைய போஜனபந்திக்கும் பங்குள்ளவர்களாயிருக்கக்கூடாதே. நாம் கர்த்தருக்கு எரிச்சலை மூட்டலாமா? அவரிலும் நாம் பலவான்களா? (வசனங்கள் 21 - 22)

இப்புத்தகத்தின் முடிவின் நாம் காண இருப்பது போல, இராபோஜனத்தில் நாம் பங்கேற்பது, உலகத்தின் வேறெந்த செயல்களிலிருந்தும் வேறுபிரிக்கப்பட்டதும், விசேஷமானதாயும் இருக்கிறது.

கர்த்தரின் பந்தியை அணுகுதல்

இராபோஜனத்தின் ஏழு அம்சங்களை நாம் பார்க்கும் முன், நான் சுருக்கமாக ஆராய விரும்பும் இரண்டாவது பகுதி, அடுத்த அதிகாமாகிய 1 கொரிதியர் 11ல் காணப்படுகிறது. இங்கு பவுல் கூறும் காரியம், கவனம் செலுத்த வேண்டிய ஒன்று: நாம் கர்த்தருடைய பந்தியை எப்படி அணீகுகின்றோம் ? 23ம் வசனத்தில் துவங்குவோம்.

நான் உங்களுக்கு ஒப்புவித்ததைக் கர்த்தரிடத்தில் பெற்றுக்கொண்டேன்; என்னவெனில், கர்த்தராகிய இயேசு தாம் காட்டிக்கொடுக்கப்பட்ட அன்று இராத்திரியிலே அப்பத்தை எடுத்து,

ஸ்தோத்திரம்பண்ணி, அதைப்பிட்டு: நீங்கள் வாங்கிப் புசியுங்கள், இது உங்களுக்காகப்பிட்கப்படுகிறஎன்னுடைய சரீரமாயிருக்கிறது; என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள் என்றார். போஜனம்பண்ணின பின்பு, அவர் அந்தப்படியே பாத்திரத்தையும் எடுத்து: இந்தப் பாத்திரம் என் இரத்தத்தினாலாகிய புதிய உடன்படிக்கையாயிருக்கிறது; நீங்கள் இதை பானம்பண்ணும்போதெல்லாம் என்னை நினைவுகூரும்படி இதை செய்யுங்கள் என்றார். ஆகையால் நீங்கள் இந்த அப்பத்தைப் புசித்து, இந்தப் பாத்திரத்தில் பானம்பண்ணும்போதெல்லாம் கர்த்தர் வருமளவும் அவருடைய மரணத்தைத் தெரிவிக்கிறீர்கள். இப்படியிருக்க, எவன் அபாத்திரமாய்க் கர்த்தருடைய அப்பத்தைப் புசித்து, அவருடைய பாத்திரத்தில் பானம்பண்ணுகிறானோ, அவன் கர்த்தருடைய சரீரத்தையும் இரத்தத்தையும் குறித்துக் குற்றமுள்ளவனாயிருப்பான். (1 கொரிந்தியர் 11:23 - 27)

குற்றமுள்ளவனாயிருப்பான் என்ற அந்த வார்த்தைகளை நான் எப்போதும் பொறுப்புள்ளவனாய் "அல்லது" பதில் சொல்ல

வேண்டியவனாய் என்று மொழிப்பெயர்ப்பேன். நாம் ஒரு இராபோஜன ஆராதனையில் பங்கேற்றுவிட்டால், புதிய ஏற்பாட்டின் போதனையை நன்கு அறிந்திருக்கிறேன் என்று நாம் தெளிவாக அறிவிக்கிறோம். அந்த போதனையின் அடிப்படை குறிப்புகள் என்ன ? இயேசு நமது பாவங்களுக்காக கல்வாரி சிலுவையில் மரித்து, நம்முடைய மீட்பிற்காக, தமது இரத்தத்தை சிந்தினார். கர்த்தருடைய பந்தியில் பங்கேற்கும் நொடி துவங்கி, அதற்கு பின் எப்பொதுமே, நாம் அறிந்திருக்கும் சத்தியத்திற்காக பதில் சொல்ல வேண்டியவர்களாக இருக்கிறோம்.

இந்த பின்னணியில், நாம் 28 மற்றும் 29 வசனங்களுக்கு தொடர்ந்து போவோம்:

எந்த மனுஷனும் தன்னைத்தானே சோதித்தறிந்து, இந்த அப்பத்தில் புசித்து, இந்தப் பாத்திரத்தில் பானம்பண்ணக்கடவன்.
என்னத்தினாலெனில், அபாத்திரமாய்ப் போஜனபானம்பண்ணுகிறவன் கர்த்தருடைய சரீரம் இன்னதென்று நிதானித்து அறியாததினால், தனக்கு ஆக்கினைத்தீர்ப்பு வரும்படி போஜன பானம்பண்ணீகிறான்.

ஒரு நிமிடம் 29ம் வசனத்தில் உள்ள "...

கர்த்தருடைய சரீரம் இன்னதென்று நிதானித்து அறியாததினால்" என்ற வார்த்தைகளை கவனிப்போம்.

ஆங்கில வேதாகமங்களில் "பகுத்தறிதல்" என்ற வார்த்தையை பயன்படுத்துகின்றனர். ''நிதானித்து'' என்ற வார்த்தையை விட அந்த வார்த்தையையே நான் விரும்புகிறென். இப்போது, ''பகுத்தறிதல்'' என்ற வார்த்தையை 29ம் வசனத்தில் ாநிதானித்துா என்பதற்கு பதிலாக பயன்படுத்துவோம்.

அபாத்திரமாய்ப் போஜனபானம்பண்ணுகிறவன் கர்த்தருடைய சரீரம் இன்னதென்று பகுத்தறியாததினால், தனக்கு ஆக்கினைத்தீர்ப்பு வரும்படி போஜனபானம்பண்ணுகிறான். இங்கு பயன்படுத்தப்பட்டுள்ள அதே மூல வார்த்தை, ஆவிகளை பகுத்தரியும் வரத்தை குறித்து புதிய ஏற்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ள இடத்திலும் பயன்படுத்தப்பட்டுள்ளது. இக்கருத்து, புதிய ஏற்பாட்டில் பயன்படுத்தப்பட்டுள்ள விதத்தை புரிந்துக்கொண்டால், இதன் அர்த்தம்என்னவென்றால்,மேல்பரப்பிற்கும் அடியில் சென்று, உள்ளான ஆவிக்குரிய உண்மையை காண்பதாகும். இப்பகுதியை நன்கு புரிந்துக்கொள்வதற்கு "பகுத்தறிதல் என்றவார்த்தையேமிகசிறந்தது. 29மற்றும்

30 வசனங்களில் தொடரும் போது, அவை இரண்டும் மிக முக்கியமான குறிப்புகளை முன் வைக்கிறதை காண்கிறோம்:

என்னத்தினாலெனில், அபாத்திரமாய்ப் போஜனபானம்பண்ணுகிறவன் கர்த்தருடைய சரீரம் இன்னதென்று நிதானித்து அறியாததினால், தனக்கு ஆக்கினைத்தீர்ப்பு வரும்படி போஜனபானம்பண்ணுகிறான். இதினிமித்தம், உங்களில் அநேகர் பலவீனரும் வியாதியுள்ளவர்களுமாயிருக்கிறார்கள்; அநேகர் நித்திரையும் அடைந்திருக்கிறார்கள்.

அநேகர் நித்திரை அடைந்திருக்கிறார்கள்ா என்பதற்கு "அநேகர் குறை வயதில், காலத்திற்கு முன்பே மரித்திருக்கிறார்கள்" என்று அர்த்தம். உங்கள் காலத்திற்கு முன் நீங்கள் மரிக்க கூடும் என்பதை உணருகிறீர்களா ? இப்பகுதி, கர்த்தருடைய பந்தியின் முக்கியத்துவத்தையும், தூய்மையையும், புனித தன்மையையும் காண்பிக்கிறது. நான் முன்பு சொன்னது போல, இவைகள் மிக முக்கியமான வசனங்கள். நாம் தவறாக பங்கேற்றால், இதுவே வியாதிக்கும், சில நேரத்தில் அகால மரணத்திற்கும் காரணமாயிருக்கலாம்.

எப்படி நாம் பங்கேற்கிறோம்

என் பின்னணியினால் நான் ஆங்க்லிக்கன்

திருச்சபையை சேர்ந்தவன். ஒரு விதத்தில், அந்த சபையின் போதனை இரட்சிப்பையே இராபோஜனத்தை சார்ந்ததாக கிட்டத்தட்ட நிறுத்திவிடுகிறது. ஆனால் அது முழு உண்மையும் அல்ல. நீங்கள் எப்படி இராபோஜனத்தில் பங்கேற்கிறீர்கள் என்பதையே சார்ந்ததாகும். இரட்சிப்பின் வழியாக இருப்பதை விட அதற்கு எதிரிடையானதாய் இருக்கக்கூடும். அது நியாயத்தீர்ப்பின் காரணமாக அமைந்துவிடக்கூடும். ஆகையால், தேவனோடிருக்கும் நம்முடைய உற வின் கருத்தை, வெறும் இராபோஜனத்தில் பங்கேறபதின் அடிப்படையில் அமைக்க முடியாது. அதில் நாம் சரியாக பங்கேற்கிறோமா, தவறாக பங்குபெறுகிறோமா என்பதே முக்கியம்.

நாம் சொன்னது போல, இது மிக முக்கியமான விஷயம். கர்த்தருடைய பந்தியின் ஏழு அம்சங்களின் இந்த முன்னுரையை 31 மற்றும் 32ம் வசனங்களை தியானித்து, முடிப்போம்.

நம்மை நாமே நிதானித்து அறிந்தால் நாம் நியாயந்தீர்க்கப்படோம். நாம் நியாயந்தீர்க்கப்படும்போது உலகத்தோடே ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படாதபடிக்கு, கர்த்தராலே சிட்சிக்கப்படுகிறோம்.

இச்சூழ்நிலையில் நமக்காக ஆண்டவர் செய்யக்கூடிய யாவையும் செய்கிறார் என்று

காணமுடிகிறதா ? முதலாவது, ஈஉன்னையே நீ நிதானித்து, தகுதியான விதத்தில் பங்கேற்றால், நான் உன்னை சிட்சிக்க வேண்டிய அவசியம் இருக்காது என்று அவர் கூறுகிறார். பின்பு, உன்னை நீயே நிதானிக்க தவறினால், நான் உன்னை சிட்சிக்க வேண்டியதாக இருக்கும். அப்படியிருந்தும், உலகத்தோடு நீ நியாயந்தீர்க்கப்படுவதை விட, என்னால் சிட்சிக்கப்படுவதே நலம் என்று கூறுகிறார். உலகத்தோடு நியாயந்தீர்க்கப்படுவது என்ற இறுதி பேரழிவை தான் நாம் தவிர்க்க வேண்டும்.

1 கொரிந்தியர் 10 மற்றும் 11ல் உள்ள இந்த பகுதிகளை ஆராய்ந்து விட்ட நாம், நமது ஆராய்வின் அடுத்த கட்டத்திற்கு செல்ல ஆயத்தமாயிருக்கிறோம்: கர்த்தருடைய பந்தியின் ஏழு அம்சங்கள். இராபோஜனத்தின் இந்த மிக அழகான, புனிதமான செயலில் நாம் ஈடுப்படும்போது, நீங்களும் நானும், இயேசுவோடும் அவருடைய சரீரத்தோடும் எப்படி தொடர்புக்கொள்கிறொம் என்பதை குறித்ததான இன்னும் ஆழமான அறிவை இந்த ஏழு அம்சங்களும் கொடுக்கும் என நம்புகிறேன்.

அத்தியாயம் 5

அம்சம் 1: அறிக்கை செய்தல்

கடந்த அத்தியாயத்தின் ஆரம்பத்தில், இந்த கேள்வியை கேட்டோம்: கர்த்தருடைய பந்தியில் பங்கேற்பதை குறித்து, கிறிஸ்தவர்களாகிய நமக்கு, புதிய ஏற்பாடு, என்ன கற்றுக்கொடுக்கிறது ? அந்த கேள்விக்கு பதிலாக, வேதம் ஏழு முக்கிய அம்சங்களை வேளிப்படுத்துகிறது என்று நான் கூறினேன். அவைகளை நான் குறிப்பிட்ட வரிசையில், முன் வைக்கிறேன். முதல் மூன்று, கிறிஸ்துவோடு இருக்கும் நமது உறவை குறித்தவை. அடுத்த மூன்று, கிறிஸ்துவின் சரீரத்தோடு நமக்கிருக்கும் உறவை குறித்தவை. கடைசி அம்சம், உலகத்தை பொறுத்த வரை, நமக்கு என்ன உறவு என்பதை குறித்தது.

கிறிஸ்து இயேசுவோடு இருக்கும் உறவில் என்பதிலேயே, இராபோஜனத்தில் பங்கேற்பது மூன்று அம்சங்களை கொண்டதாக இருக்கிறது. முதலாவது, அறிக்கை செய்தல், இரண்டாவது, நினைவுகூறுதல், மற்றும் மூன்றாவது, எதிர்பார்த்தல்.

இந்த சுருக்கமான அத்தியாயத்தில், அறிக்கை

செய்தல், என்ற முதல் அம்சத்தை நாம் 1 கொரிந்தியர் 11:26ல் பவுலின் வார்த்தைகளை வசித்து, தியானிப்போம்:

ஆகையால் நீங்கள் இந்த அப்பத்தைப் புசித்து, இந்தப் பாத்திரத்தில் பானம்பண்ணும்போதெல்லாம் கர்த்தர் வருமளவும் அவருடைய மரணத்தைத் தெரிவிக்கிறீர்கள்.

பிரபஞ்சத்திற்கு அறிக்கை செய்தல்

இந்த வசனம் இதை மிக எளிமையாக கூறுகிறது. கர்த்தருடைய பந்தியில் பங்கேற்கிறதினால், நாம் கர்த்தருடைய மரணத்தை அறிக்கை செய்கிறோம். இந்த சத்தியத்தை நம்முடைய உடன் விசுவாசிகளுக்கு மட்டும் நாம் அறிக்கை செய்யவில்லை. உண்மையில், அது முக்கியமானது அல்ல. மாறாக, நாம் உலகத்திற்கு இதை அறிக்கை செய்கிறோம். அதை விட முக்கியமாக, முழு காணப்படாத தளத்திற்கும், கர்த்தருடைய மரணத்தை நாம் அறிவிக்கிறோம். நாம் நல்ல மற்றும் பொல்லாத தூதர்களுக்கும், நல்ல மற்றும் பொல்லாத ஆவிகளுக்கும் அறிவிக்கிறோம். நாம் முழு பிரபஞ்சத்திற்கும் இயேசு கிறிஸ்துவின் மரணத்தை அறிவிக்கிறோம். இது அறிக்கை செய்தலின் மிக வல்லமையான, அதிகாரம் நிறைந்த ஓர் செயலாகும்.

நீங்கள் அழைக்கப்பட்ட அல்லது ஊழியம் செய்கிற ஒரு பிரசங்கியாராக இல்லாமல் இருக்கலாம். ஆனால், இந்த இராபோஜனத்தின் பொருட்களில் பங்கேற்கும் போது, நீங்கள் மிகுந்த முக்கியத்துவம் கொண்ட ஒரு அறிக்கையை செய்கிறீர்கள். முழு பிரபஞ்சத்திற்கும், தேவனுடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்து, மரித்து, உங்கள் சார்பாக, உங்களை மீட்க தமது இரத்தத்தை சிந்தினார் என்று அறிக்கை செய்கிறீர்கள். இரட்சகராகிய அவரில், உங்கள் விசுவாசத்தையும் அறிக்கை செய்கிறீர்கள். உங்களுக்காக, பரிகாரம் செய்யும் அவருடைய மரணத்தில் உங்கள் விசுவாசத்தை அறிக்கை செய்கிறீர்கள்.

ஆகவே, இது தான் முதல் அம்சம்: இராபோஜனம் முதன்மையாக ஒரு அறிக்கையின் செயலாக இருக்கிறது. நாம் வாசித்த வசனத்தில் பவுல் கூறினது போல, "....கர்த்தர் வருமளவும் அவருடைய மரணத்தைத் தெரிவிக்கிறீர்கள்".

அத்தியாயம் 6

அம்சம் 2: நினைவுகூறுதல்

இயேசுவோடு இருக்கும் உறவை பொறுத்த வரையில், இராபோஜனத்தின் இரண்டாவது அம்சம் நினைவுகூறுதல் ஆகும். நாம் கர்த்தருடைய பந்தியில் பங்கேற்கும் போது, அவருடைய மரணத்தை திரும்பிப் பார்க்கிறோம். 1 கொரிந்தியர் 11:25ல் பவுல் கூறுகிறது போல, இயேசுவே இந்த நினைவுகூறுதலை குறித்த குறிப்பை முன் வைத்தர்:

> *இந்தப் பாத்திரம் என் இரத்தத்தினாலாகிய புதிய உடன்படிக்கையாயிருக்கிறது;நீங்கள் இதை பானம்பண்ணும்போதெல்லாம் என்னை நினைவுகூரும்படி அதை செய்யுங்கள் என்றார்.*

அதற்கு பின், அவருடைய மரணத்தை நினை வுகூறுதல் என்ற அம்சத்தை பவுல் 26ம் வசனத்தில் சேர்க்கிறார். ... நீங்கள் இந்த அப்பத்தைப் புசித்து, இந்தப் பாத்திரத்தில் பானம்பண்ணும்போதெல்லாம் கர்த்தர் வருமளவும் அவருடைய மரணத்தைத் தெரிவிக்கிறீர்கள்.

புனித சடங்குகள் மற்றும் கட்டளைகள்

நினைவுகூறுதலில் நமக்கு உதவி செய்ய,

கிறிஸ்தவ வாழ்வில் அநேக பாரம்பரியங்கள் உண்டு. உங்கள் சபை பிரிவு எதை போதிக்கிறது என்பதின் அடிப்படையில், இவைகளை தான் புனித சடங்குகள் அல்லது கட்டளைகள் என்று நாம் அழைக்கிறோம். சுருக்கமாக சொன்னால், ஒரு புனித சடங்கு அல்லது கட்டளை, சுவிசேஷத்தின் மிக முக்கிய சத்தியங்களின் தொகுப்பாகும். இந்த சத்தியங்கள் எந்த அளவிற்கு முக்கியமென்றால், தேவன் தமது இறையாண்மையின் ஞானத்தில், இவைகளை வலியுறுத்தி காண்பிக்க ஒரு விசேஷித்த வழியை ஏற்பாடு செய்துள்ளார். அவைகளை நாம் வெறும் வார்த்தைகளில் மட்டும் அல்ல, உணர்த்தும் செயல்களாகவும் முன் வைக்கிறோம்.

என் வாழ்கையின் ஐந்து ஆண்டுகளை கிழக்கு ஆப்பரிக்காவின் பள்ளிகளில் ஆசியர்களை பயிற்றுவிப்பவராக கழித்தேன். எங்களிடம் பயிற்ச்சியைப் பெற்ற ஆசிரியர்களுக்கு நாங்கள் வலியுறுத்தின ஒரு கருத்து இது தான்: பிள்ளைகள் காதால் கேட்கிறவைகளை 40 சதவீதமும், காதால் கேட்டு கண்ணால் காண்பதை 60 சதவீதமும், கேட்டு, கண்டு செய்கிறவைகளை 80 சதவீதமும் ஞாபகம் வைக்கிறார்கள். பல ஆண்டுகள் சென்றுபோய், இந்த சதவீதங்கள் மாறியிருக்கலாம் ஆனால் அந்த கோட்பாடு இன்னும் நிலைத்திருக்கிறது. ஒரு பிள்ளையின் மனதில் நீங்கள் அதிகபட்ச

தாக்கத்தை உண்டாக்க விரும்பினால், வெறும் சத்தியத்தை கேள்விப்படுவதை காட்டிலும் நீங்கள் அதிகம் செல்ல வேண்டும். அந்த பிள்ளை அதை கேட்கட்டும், காணட்டும் மற்றும் செய்யட்டும். கற்றுக்கொள்பவைகளை தாங்களே செய்யும் ஒரு செயலாக அவர்கள் மாற்றட்டும்.

புனித சடங்குகள் மற்றும் கட்டளைகளை பொருத்த வரையில், இதே கோட்பாடு உண்மையாகும். புதிய ஏற்பாட்டின் மிக பெரிய அடிப்படை சத்தியங்கள் எவ்வளவு முக்கியம் என்றால், அவைகள நாம் கேட்க மட்டும் தேவன் வழி செய்ய வில்லை, அல்லது கேட்டு காண மட்டும் வழியை ஏற்படுத்தவில்லை. மாறாக, நாம் அவைகளை கேட்டு, கண்டு, செய்ய வேண்டுமென்று வலியுறுத்துகிறார்.

புதிய ஏற்பாட்டில் போதிக்கப்பட்டுள்ள புனித சடங்குகள் அல்லது கட்டளைகளை பொறுத்த வரையில், கிறிஸ்துவின் சரீரமாகிய சபையில், அவைகளின் எண்ணிக்கையை குறித்து பல்வேறு பாரம்பரியங்கள் உண்டு. அவைகளை எல்லாம் இங்கே விவரிக்க எனக்கு இடம் போதாது. ஆனால் நம்முடைய நோக்கங்களுக்காக, இந்த அதிகாரத்தில் அவைகளில் மூன்று மட்டும் நாம் முக்கியத்துவப்படுத்தி காண்பிக்கிறேன்.

1. ஞானஸ்நானம்.

இம்மூன்று சடங்குகளில் ஞானஸ்நானம் முதன்மையானது. நாம் கிறிஸ்துவோடும், அவருடைய சரீரத்தோடும் பகிரங்கமாக இணைக்கப்படுவதின் ஆரம்ப நிலை கட்டளை இது. இது ஒரு செயல். அது எப்படி செய்யப்பட்டாலும் - தெளித்தோ, மூழ்கச்செய்தோ - எல்லா கிறிஸ்தவ சபைகளிலும் ஞானஸ்நானத்தை குறித்த அடிப்படை போதனை ஒன்றுதான். அது ஆண்டவரகிய இயேசு கிறிஸ்துவின் மரணம், அடக்கம் மற்றும் உயிர்தெழுதலில் பங்கடைய செய்யும் ஒரு பகிரங்க செயல்.

இது என்னுடைய சொந்த கருத்து: இந்த செயலை செய்யாமல், கிறிஸ்துவின் சரீரத்தில் தனக்கு ஒரு இடத்தை உரிமை கோர எந்த விசுவாசிக்கும் உரிமையும் இல்லை. ஞானஸ்நானம் பெறாமல் இரட்சிக்கப்பட்டதாக புதிய ஏற்பாட்டில் யாரும் கூறினதாக ஒரு சம்பவம் கூட இல்லை. ஒன்றை கூட நீங்கள் கண்டுப்பிடிக்க முடியாது. மாற்கு 16:16ல் இயேசு, விசுவாசமுள்ளவனாகி ஞான ஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான் என்று கூறினார். இந்த கட்டளை மிகுந்த முக்கியத்துவம் கொண்டது - இயேசுவின் மரணம், அடக்கம் மற்றும் உயிர்தெழுதலில் பங்கடைவதாகும். ஆகவே இதை எல்ல விசுவாசிகளுக்காகவும் தேவன் ஏற்படுத்தினார்.

கிறிஸ்துவின் சரீரத்தில் ஒவ்வொரு முறையும் ஒரு

நபர் இணைக்கப்படும் போது, இந்த அர்த்தமுடைய செயலினால், அந்த இணைப்பை அவர்கள் உறுதி செய்ய வேண்டும். அது மட்டுமல்ல, அந்த ஞான ஸ்நானத்தை காண்கிற ஒவ்வொருவருக்கும், அதின் முக்கியத்துவம் நினைவுப்படுத்தப்படுகிறது.

2. வியாதியஸ்தர்களுக்கு எண்ணெய் பூசி ஜெபித்தல்.

இன்னொரு கட்டளை வியாதியஸ்தர்களுக்கு எண்ணெய் பூசி ஜெபிப்பதாகும். இந்த சத்தியம் எவ்வளவு முக்கியமென்றால், இதை கேட்க மட்டும் அல்லது கேட்டு காண மட்டும் தேவன் நம்மை அனுமதிப்பதில்லை, அதை செயல்படுத்த நமக்கு உதவுகிறார். வியாதியஸ்தர்களுக்கு எண்ணெய் பூசுவதின் முக்கியத்துவம் என்ன ? வேதம் முழுவதிலும், எண்ணெய் எப்போதும் பரிசுத்த ஆவியை குறிக்கும். வியாதியஸ்தர்களுக்கு நாம் எண்ணெய் பூசும் போது, பரிசுத்த ஆவியான வர் என்ன செய்வார் என்று வேதம் கூறுகிறதோ, அதை அவர் மெய்யாகவே செய்வார் என்று விசுவாசிக்கிறோம் என்பதை அறிக்கை செய்கிறோம். அவர் பெலப்படுத்துவார், அவர் ஜீவன் கொடுப்பார், வியாதிப்பட்டிருக்கும் விசுவாசியின் சரீரத்திற்கு அவர் சுகத்தை மீண்டும் அளிப்பார்.

3. கர்த்தருடைய பந்தி

மூன்றாவது கட்டளை, இராபோஜனத்தின்

கட்டளையாகும். இதை கர்த்தரின் பந்தி, நற்கருணை, திருவிருந்து என்று எப்படி வேண்டுமோ அழைக்கலாம். இந்த சடங்கில், தேவனுடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்து மரித்து, சிலுவையில் நமக்காக இரத்தம் சிந்தினார் என்று நாம் அறிவிக்கிறோம். நாம் இதை செய்யும் போதெல்லாம், அவரை நினைவுகூறும் படி செய்கிறோம். பாவிகளாகிய நமக்காக இயேசு மரித்தார் என்ற உண்மையை நாம் ஒருபோதும் மற க்கக்கூடாது என்று தேவன் விரும்புகிறார்.

அநேக கிறிஸ்தவர்களின் மனது கிறிஸ்துவின் மரணத்தில் கவனம் செலுத்தாதம் காரணமாகவே, அவர்கள் அதிக ஆவிக்குரிய பிரச்சனை களை சந்திக்கின்றனர் என்று நான் உறுதியாக சொல்ல முடியும். தேவன் என்னை நேசிக்கிறாரா தெரியவில்லை. தேவன் என்னை மறந்து விட்டாரா ? என்றெல்லாம் அவர்கள் கூறுவார்கள். நீங்கள் சிலுவையை நினைவுகூர்ந்தால், அப்படி பேச மாட்டீர்கள். சிலுவை தான் நம்மேல் வைக்கப்பட்டிருக்கும் தேவனுடைய அன்பின் உச்சக்கட்ட வெளிப்பாடாகும். ரோமர் 8:32ன் வர்த்தைகளை கவனியுங்கள்:

தம்முடைய சொந்த குமாரனென்றும் பாராமல் நம்மெல்லாருக்காகவும் அவரை ஒப்புக்கொடுத்தவர், அவரோடே கூட மற்ற எல்லாவற்றையும் நமக்கு

அருளாதிருப்பதெப்படி?

முழு சுதந்திரமும் நம்முடையது என்பதற்கு இதுவே ஆதாரம். இருள், சோதனை மற்றும் நெருக்கத்தின் காலங்களில் என் ஜனங்கள் இந்த சடங்கை, கட்டளையை செயல்படுத்தி காண்பிப்பது மிக முக்கியம். கர்த்தருடைய பந்தியில் பங்கேற்பதின் மூலம், உனக்காக இயேசுவின் மரணம் மற்றும் பலியின் உண்மையை நீ எப்போதும் நினைவுகூறுவாயாக என்று தேவன் நம்முடன் பேசுகிறார். "இதை நீ ஒரு போதும் மறக்க கூடாது. எப்போதும் அது உனக்கு நினைப்பூட்டப்பட வேண்டுமென்று விரும்புகிறேன்" என்று தேவன் சொல்கிறார்.

அடிக்கடி இராபோஜனம் எடுங்கள்

1 கொரிந்தியர் 11:25ல், இயேசு பாத்திரத்தை எடுத்த போது, "இதை நீங்கள் செய்யும் போதெல்லாம் என்னை நினைவுகூறும் படி செய்யுங்கள்" என்று கூறினார். கிறிஸ்தவ சபையின் சில விமர்சகர்கள் "நாங்கள் அதை செய்தால் தானே" என்று மாற்றிவிட்டோம்" என்று கூறுகின்றனர்.

கர்த்தரின் மரணத்தை விசுவாசிகள் தொடர்ந்து நினைவுகூற வேண்டும் என்று நான் உறுதியாக சொல்வேன். நாங்கள் அங்கத்தினராய் இருந்த சில சபைகளில், கர்த்தரின் பந்தியை வெகு குறைவான சந்தர்ப்பங்களில் அனுசரிப்பார்கள்.

நான் அடுத்து சொல்ல இருக்கும் காரியம் உங்களுக்கும் அதிர்ச்சியாக இருக்கலாம் அல்லது ஆசீர்வாதமாகவும் இருக்கலாம். நானும் ரூத்தும் ஒவ்வொரு நாள் காலையிலும் கர்த்தருடைய பந்தியை அனுசரிக்க தீர்மானித்தோம். இராபோஜனத்தை நான் ஒருபோதும் மறக்க விரும்பவில்லை.

பெந்தேகோஸ்தே இயக்கத்தின் முன்னோடி சுவிசேஷகர்களில் ஒருவரான ஸ்மித் விகில்ஸ்வர்த் எங்கு சந்தர்ப்பம் கிடைத்தாலும் கர்த்தருடைய பந்தியில் பங்கேற்பாராம். தன்னுடைய சுவிசேஷ ஊழிய பயணங்களில், எங்கு சென்றாலும், இராபோஜன ஆராதனை நடக்கிற ஒரு சபையை தேடி செல்வாராம். கண்டுப்பிடித்தவுடன், உள்ளே சென்று இராபோஜனத்தில் பங்கேற்பாராம். நாம் கர்த்தருடைய மரணத்தை போதுமான அளவு நினைவுக்கூறாததே நம்முடைய அநேக ஆவிக்குரிய, உணர்ச்சிப்பூர்வமான மற்றும் மனநிலையிலான பிரச்சனைகளுக்கு காரணமாக இருக்கிறது.

அத்தியாயம் 7

அம்சம் 3: எதிர்ப்பார்த்தல்

இயேசுவோடு இறுக்கும் உறவில் இராபோஜனத்தின் மூன்றாவது அம்சம் எதிர் பார்த்தல் ஆகும். அறிக்கை செய்தல் மற்றும் நினை வுகூறுதல் ஆகிய முதல் இரண்டுடன் இதற்கு நெருங்கிய தொடர்புண்டு. 1 கொரிந்தியர் 11:26ஐ மறுபடியும் நாம் பார்ப்போம், ஆனால் முக்கியமாக அதின் முடிவை உற்று கவனிப்போம்:

> *ஆகையால் நீங்கள் இந்த அப்பத்தைப் புசித்து, இந்தப் பாத்திரத்தில் பானம்பண்ணும்போதெல்லாம் கர்த்தர் வருமளவும் அவருடைய மரணத்தைத் தெரிவிக்கிறீர்கள்.*

நாம் அவருடைய மரணத்தை திரும்பி பார்த்து அறிக்கை செய்வது மட்டுமல்ல, அவருடைய வருகையையும் எதிர்நோக்கி பார்க்கின்றோம்! இந்த கட்டளையை நாம் ஒவ்வொரு முறையும் நிறைவேற்றும் போது, இரண்டு சத்தியங்களை நமக்கு நாமே நினைவுப்படுத்துகிறோம்: முதலாவது, இயேசு சிலுவையில் நமது பாவங்களுக்காக மரித்தார்; இரண்டாவது, அவர் மறுபடியும் வருகிறார்!

கடந்த காலத்தில் இயேசு நமக்காக மரித்தார்,

எதிர்காலத்தில் உங்களையும் என்னையும் சேர்த்துக்கொள்ள வருகிறார் என்ற உணர்வோடு நாம் நிமிஷத்திற்கு நிமிஷம் வாழ முடியுமானால், நமக்குள் தோன்றும் பல மனச்சோர்வுகளும் இருளான மனநிலைகளும் நமக்குள் எழும்பவே எழும்பாது.

சர் ரோபர்ட் ஆண்டசன் என்ற கடந்த காலத்தின் ஒரு பரிசுத்தவான், "தி கமிங் பிரின்ஸ்ா" என்ற புத்தகத்தில் இந்த உறுதியை மிக அழகாக வெளிப்படுத்தினார். அப்புத்தகத்திலே அவர் கூறினார், நாம் இராபோஜனத்தில் பங்கேற்கும் போது, மற்றெல்லாம் கண்முன்னிருந்து மறைந்து போகும். அந்நேரத்தில், முக்கியமான காரியங்கள் மேல் மட்டும் நாம் கவனம் செலுத்துகிறோம். ஆண்டர்சன் அதை இப்படியாக சொன்னார்: "சிலுவையேயன்றிரொரு கடந்தகாலம் இல்லை, வருகையேயன்றி ஒரு எதிர்காலம் இல்லை."

நம்மை கலங்கச்செய்யும், துன்புறுத்தும், குழப்பும் எல்லா சிறிய காரியங்கள் மற்றும் நிகழ்வுகளை, நம்முடைய பார்வையிலிருந்து சற்று நேரத்திற்கு நாம் மறைந்து போக அனுமதிக்கும் போது எவ்வளவு நன்றாய் இருக்கிறது. நாம் சிலுவையை திரும்பி பார்க்கிறோம் - அதன் பின் நாம் வருகையை எதிர்நோக்குகிறோம்.

கர்த்தராகிய இயேசுவே, சீக்கிரம்

வாரும்!

கடந்த காலத்தில் நடந்த பல எழுப்புதல்களில் நமது ஆண்டவரின் வருகையை குறித்து கிறிஸ்தவர்கள் உணர்வோடிருந்தார்கள். அவர்கள் பேச்சு அதை குறித்த ஒரு எதிர்ப்பார்ப்பை கொண்டதாக இருந்தது - ஏதோ ஐந்து ஆண்டுகளுக்குள் ஆண்டவர் வர போகிறது போல. ஆனால், அவர் வரவில்லை. அதின் விளைவாக, இன்று இந்த தவறான ஒரு மனநிலையை காண்கிறோம்: "கர்த்தருடைய வருகையை குறித்து பேசுவதே முட்டாள்த்தனம்" என்று கூறுகிறார்கள்.

ஆனால் என்னை பொறுத்தவரை, கர்த்தருடைய வருகையை குறித்து பேசுவது முட்டாள்த்தனம் அல்ல. இயேசு வருகிறார் என்றும், அவர் சீக்கிரமாய் வருகிறார் என்பதையும் நான் விசுவாசிக்கிறேன். அவர் திரென்று வரப்போகிறார். புதிய ஏற்பாடு இந்த ஜெபத்துடன் நிறைவுப்பெறுகிறது: "இவைகளை சாட்சியாக அறிவிக்கிறவர்: மெய்யாகவே நான் சீக்கிரமாய் வருகிறேன் என்றார். ஆமென், கர்த்தராகிய இயேசுவே வாரும் !" (வெளிப்படுத்தல் 22:20)

அந்த ஜெபத்தை ஒரு உண்மையான இருதயத்துடன் நாம் ஜெபிக்க முடியவில்லை என்றால், நம்முடைய ஆவிக்குரிய நிலையில் ஏதோ குறைவு இருக்கிறது என்றே அர்த்தமாகும். அந்த

வார்த்தைகள் சுமார் இருபது நூற்றாண்டுகளுக்கு முன் எழுதப்பட்டது. அந்த காலத்தில் அதை சொல்லி ஜெபிப்பது முட்டாள்த்தனமா ? என்னை பொருத்த வரை அது ஒரு போதும் முட்டாள்த்தனம் அல்ல.

கிறிஸ்துவின் சரீரமாகிய சபையாக நாம் என்ன செய்தாலும் (உலகத்தில் நாம் இன்னும் நிறைவேற்றி முடிக்காத பெரும் பொறுப்புகள் நமக்கு உண்டு), உலகத்தின் அத்தனை பிரச்சனை களுக்கும் இயேசுவின் மறு வருகையே தீர்வாகும். அவர் வராமல் போனால், மீண்டு வரக்கூடாத ஒரு பெறும் குழப்பத்தில் நாம் சிக்கிக்கொள்வோம்.

வரப்போகும் பிரபு

இந்த அதிகாரத்தின் முடிவோடு, நாம் இராபோஜனத்தில் பங்கேற்பதன் முதல் மூன்று அம்சங்களை ஆராய்ந்து முடித்து விட்டோம். கிறிஸ்துவோடு இருக்கும் நம்முடைய உறவில் அந்த மூன்று அம்சங்களையும் நான் மறுபடியும் முன் வைக்கிறேன். முதலாவது, அறிக்கை செய்தல்; இரண்டாவது, நினைவுகூறுதல், (கடந்த காலத்திற்கு திரும்பி பார்த்தல்); மூன்றாவது, எதிர்பார்த்தல் (வருங்காலத்திற்கு எதிர்நோக்குதல்).

சர் ராபர்ட் ஆண்டர்சனின் வார்த்தைகளை மறுபடியும் கூறி நம்முடைய ஆராய்வின் இந்த பகுதியை நாம் முடிப்போம். இந்த அதிகாரத்தை

அது அழகாக உள்ளடக்கும். (பின் வரும் அறிக்கையை நீங்கள் சொந்தப்படுத்தி, சத்தமாக அறிக்கை செய்யுங்கள்).

சிலுவையேயன்றி ஒரு கடந்த காலம் இல்லை; வருகையேயன்றி ஒரு எதிர்காலம் இல்லை.

சிலுவையேயன்றி ஒரு கடந்த காலம் இல்லை; வருகையேயன்றி ஒரு எதிர்காலம் இல்லை.

அத்தியாயம் 8

அம்சம் 4: அடையாளம் காணீதல்

இந்த அத்தியாயத்திலும், அடுத்து வரும் அத்தியாயங்களிலும், இராபோஜனத்தின் அடுத்த மூன்று அம்சங்களை நாம் ஆராய போகிறோம் - அம்சங்கள் நான்கு, ஐந்து மற்றும் ஆறு. நாம் கர்த்தருடைய பந்தியை அனுசரிக்கும் போது, இவைகள் கிறிஸ்துவின் சரீரத்தோடு நமக்கு இருக்கும் உறவை குறித்து பேசுகின்றன. இவைகளுக்கு நான் தேர்ந்தெடுத்திருக்கும் மூன்று வார்த்தைகள், அடையாளம் காணுதல், பங்கேற்பு மற்றும் பகிர்ந்துக்கொள்ளுதல் ஆவன.

இந்த அத்தியாயத்தில் நாம், அடையாளம் காணுதல் என்ற அம்சத்தில் கவனம் செலுத்துவோம். இந்த ஆராய்வில் முன்பு பார்த்த ஒரு வசனத்தை நாம் திரும்பவும் பார்ப்போம், 1 கொரிந்தியர்: **11:29:**

> *என்னத்தினாலெனில், அபாத்திரமாய்ப் போஜனபானம்பண்ணுகிறவன் கர்த்தருடைய சரீரம் இன்னதென்று நிதானித்து அறியாததினால், தனக்கு ஆக்கினைத்தீர்ப்பு வரும்படி போஜன பானம்பண்ணுகிறான்.*

நிதானித்து என்ற வார்த்தைக்கு பதிலாக "பகுத்தறிந்து" என்ற வார்த்தையை

பயன்படுத்துவதை குறித்து நாம் முன்பு ஆலோசித்தது உங்களுக்கு நினைவிருக்கும். இந்த நான்காம் அம்சமாகிய நிதானித்தலை பொருத்த வரை, இந்த வசனத்தில் நம்முடைய வாழ்க்கைக்கு தனிப்பட்ட விதத்தில் இரண்டு முக்கிய பயன்பாடுகள் உள்ளன. பகுத்தறிந்து என்ற வார்த்தை, இந்த பயன்பாடுகளை இன்னும் தெளிவாக காண நமக்கு உதவும்.

மேற்பரப்பிற்கு கீழ் நோக்குதல் (ஆழமாக உற்று நோக்குதல்)

விடுதலையின் ஊழியத்தில் நான் செலவிட்ட காலங்களில், அவ்வபோழுது, தேவன் எனக்கு ஆவிகளை பகுத்தறியும் வரத்தை கொடுத்தார். இந்த வரம் செயல்பட்டபோதெல்லாம், உதவியை நாடி வந்த சகோதரன் அல்லது சகோதரியின் ஆள்தத்துவத்தின் மேல்பரப்பிற்கு கீழ் என்ன உள்ளது என்று என்னால் காண முடிந்தது போல் இருந்தது. ஊழியம் பெற வந்த அந்த நபரின் உள்ளான ஆவிக்குரிய நிலையில் ஏதோ ஒன்றை என்னால் உணர்ந்தறிய முடிந்தது - இயற்கையின் புலன்களுக்கு வெளிப்படுகிறவைகளுக்கும், இது அப்பாற்பட்டதாய் இருந்தது. ஒரு விதத்தில் அந்த நபருக்குள் இருக்கும் உள்ளான உண்மையை என்னால் அடையாளம் காண முடிந்தது. பல நேரங்களில், மரணத்தின் ஆவி மக்களுக்குள்

கிரியை செய்வதை நான் பகுத்தறிந்திருக்கிறேன். நான் அதை எப்படி என்று தெளிவாக சொல்ல முடியாது, ஆனால் அதை கண்ட உடன் அறிந்து கொள்வேன் - அவர்களுடைய ஆவிக்குள் ஆழமாக பார்ப்பதுப்போல் இருக்கும்.

இராபோஜனத்தின் போது, கிறிஸ்துவின் சரீரத்தின் அடையாளமாக இருக்கும் அப்பத்தை நாம் அப்படியாக தான் காண வேண்டும் என்று நான் நம்புகிறேன். முதலாவது நாம் ரொட்டியை பார்த்து, சாதாரண ரொட்டியை தான் காண்கிறோம். என்னை போல சிலருக்கு, பாசோவர் மாட்சோ என்று அழைக்கப்படும் புழிப்பில்லாத தட்டையைப்போல் இருக்கும் அப்பமே பிடிக்கும். மற்ற சில சபை பாரம்பரியங்களில் மக்கள் மெல்லிய பிஸ்கட் துண்டைப்போன்ற ஒன்றை புசிப்பார்கள். அங்கிலிக்கன் சபையில் நான் வளர்ந்து வந்த காலங்களில் அப்படி தான் செய்வார்கள்.

பஸ்கா பண்டிகையாக இருந்தபடியினாலும், அவர்கள் அந்த சமயத்தில் புளிப்புள்ள எதையும் சாப்பிட கூடாது என்பதாலும், இயேசுவும் அவருடைய சீஷரும் புளிப்பில்லாத அப்பத்தை புசித்தார்கள். நமக்கு அது பிஸ்கட் துண்டாகவோ, புளிப்பில்லாத தட்டையை போன்ற அப்பமாகவோ, புளிப்பில்லாத ரொட்டியாகவோ அல்லது சாதாரண ரொட்டியாக இருந்தாலும், அதிலுள்ள மேலான

முக்கியத்துவத்தை பகுத்தறிய முடியும். நாம் பகுத்தறிவை பயன்படுத்தினால், மேல்பரப்பிற்கு கீழிருக்கும் உண்மையை நாம் கண்டறிவோம். நாம் என்னத்தை காண்போம் ? கர்த்தருடைய சரீரத்தை காண்போம்.

இரண்டு பயன்பாடுகள்

தேவனுடைய நிபந்தனைகளை நிறைவேற்றி, நாம் கர்த்தருடைய பந்தியில் பங்கேற்கும் போது, நான் புசிக்கும் அந்த அப்பம், கர்த்தருடைய சரீரமாய் இருக்கிறதென்று நான் தனிப்பட்ட முறையில் விசுவாசிக்கிறேன். நான் அடையாளமாக அதை செய்யவில்லை; நான் உண்மையான ஒன்றை செய்கிறேன். அது வெறும் ஒரு அடையாளம் அல்ல, அது கர்த்தருடைய சரீரம். அது தான் பகுத்தறிவு. சரீரம் இன்னதென்று நிதானித்து அறிவது என்பதில், இதுவே முதல் பயன்பாடாக உள்ளது.

அது ஒரே அப்பமாக இருக்கிறபடியால், நாமெல்லாரும் ஒரே சரீரமாயிருக்கிறோம் என்று பவுல் கூறுகிறார். ஆகவே, அந்த அப்பம், நான் பங்கேற்கும் கர்த்தருடைய சரீரமாக மட்டும் எனக்கு இராமல், கிறிஸ்துவின் ஒட்டுமொத்த சரீரமாகிய சபைக்கும் அந்த அப்பம் அடையாளமாக இருக்கிறது. சரீரம் இன்னதென்று நிதானித்து அறிவது என்பதில், இதுவே இரண்டாம் பயன்பாடாக

உள்ளது. மறுபடியும், இந்த முக்கியமான கருத்துக்களை புரிந்துக்கொள்ள, உங்களுக்கும் எனக்கும் பகுத்தறிவு அவசியாமாக இருக்கிறது என் நன்பர்களே.

என் நண்பர், பாப் மும்ஃபோர்டு, அடிக்கடி சொல்வார், ஆண்டவருக்கு மிக விசித்திரமான பிள்ளைகள் அநேகர் உண்டு! இயற்கையாக, இராபோஜன ஆராதனையில் உங்கள் பக்கத்தில் அமர்ந்திருக்கும் நபரை பார்த்து, இவரை குறித்து உற்சாகம் அடைய அப்படி ஒன்று இவருக்குள் காணோம்மா என்று நீங்கள் சொல்லலாம், ஆனால் கர்த்தருடைய பந்தியை நாம் அனுசரிக்கும் போது, நீங்களும் நானும், மேல்பரப்பிற்கு கீழ் பார்க்க வேண்டும். எனக்கு பக்கத்தில் அல்லது எனக்கு முன்பு அமர்ந்திருக்கும் சகோதரனையோ சகோதரியையோ நான் காணும் போது, நான் வெறும் ஒரு நபரை காண்பதில்லை, நான் கிறிஸ்துவின் சரீரத்தின் ஒரு அவயவத்தை காண்கிறேன். அந்த நபருக்காக கிறிஸ்து தமது இரத்தத்தை சிந்தி மரித்தார் என்பதை காண்கிறேன்.

அந்த நொடியில், நான் அந்த நபரை அங்கிகரித்து, கனப்படுத்தாவிட்டால், நான் கர்த்தருடைய இருதயத்தை துக்கம் அடைய செய்கிறேன் என்பதை நான் உணர வேண்டும். ஏன் ? ஏனென்றால் எனக்கு பக்கத்தில் இருக்கும் அந்த பரிசுத்தவானை இயேசு நேசிக்கிறார் -

அந்த நபருக்காக மரிக்கும் அளவிற்கு அவரை நேசிக்கிறார். ஆகையால், தம்முடைய சரீரத்தின் ஒரு அவயவத்தை குறித்து நமக்கு ஒரு தவறான, நலிவான மனநிலை இருக்குமானால், அது கர்த்தரை மிகவும் துக்கம் அடைய செய்கிறது.

ஒருவருக்காக ஒருவர் கரிசனை கொள்வது

இது தான் கொரிந்தியரின் உண்மையான பிரச்சனையாக இருந்ததென்று நம்புகிறேன். அவர்களுக்குள் பல தவறான உறவுகள் இருந்தன. அவர்கள் ஒருவருக்குள் ஒருவர், கர்த்தருடைய சரீரத்தை நிதானிக்க அல்லது பகுத்தறிய தவறினார்கள். இதன் விளைவாகவே பவுல், இதினிமித்தம், உங்களில் அநேகர் பலவீன ரும் வியாதியுள்ளவர்களுமாயிருக்கிறார்கள்; அநேகர் நித்திரையும் அடைந்திருக்கிறார்கள் என்று கூறினார். (1 கொரிந்தியர் 11:30.) இன்று கிறிஸ்தவர்களுக்குள் வியாதியின் பிரதான காரணங்களில் ஒன்றாக இது இருக்கக்கூடுமா ? அநேக கிறிஸ்தவர்கள் ஒருவரை ஒருவர் கிறிஸ்துவின் சரீரத்தைப்போல நடத்தாது நிச்சயமாக காரணமாய் இருக்கலாம் என்றே சொல்லுவேன். இதை ஆழ்ந்த வருத்தத்துடன் சொல்லுகிறேன்.

உண்மை என்னவென்றால், நாம் எல்லாரும்

கொடுமைப்படுத்தப்பட்டுள்ளோம். ஒரு சக விசுவாசியின் செயல்களால், சில நேரத்தில் வேதனையான சம்பவங்கள் நிகழும்போது "இப்படிப்பட்ட நண்பர்கள் இருக்க, எனக்கு எதிரிகளே தேவையில்லை" என்ற சொல்ல வேண்டுமென்று எனக்கு தோன்றியிருக்கிறது. அப்படி இருந்தும், மற்றவர்களை விட நான் அதிகமாக காயப்பட்டதில்லை என்றே நம்புகிறேன். உண்மையை சொன்னால், என்னை விட மற்ற அநேகர், அதிக வேதனை அடைந்திருக்கிறார்கள் என்றே சொல்வேன்.

ஆகவே, இராபோஜனத்தின் இந்த அம்சம், அடையாளம் காணுதல், பகுத்தறிவை குறித்தது. வெளியரங்கமானதை கடந்து, நிரந்தரமான, ஆவிக்குரிய நித்திய உள்ளான உண்மையை கண்டறிவதை குறித்ததாகும். இந்த அம்சத்திற்கு இரண்டு பயன்பாடுகள் உள்ளன. முதலாவது, நீங்கள் சரியாக பங்கேற்றால், உங்கள் கையில் இருக்கும் அந்த சிறு அப்பத்துணிக்கை, கர்த்தருடைய சரீரமாகவே இருக்கிறது. இரண்டாவதாக, அந்த அப்பத்தில் பங்கேற்கின்ற, உங்களை சுற்றிலுமுள்ள சக விசுவாசிகளுக்குள், கர்த்தருடைய ஜீவனுள்ள சரீரம் உள்ளது. அவர்கள் அவருடைய சரீரத்தின் அவயவங்களாய் இருக்கிறார்கள். ஒருவரையொருவர் சரியாக பகுத்தறியும்படி நாம் ஜெபிப்போம்.

பின்வரும் வசனத்தில் பவுல் ஒறு முக்கிய நிபந்தனையை கூறுகிறார்: "எந்த மனுஷனும் தன்னைத்தானே சோதித்தறிந்து, இந்த அப்பத்தில் புசித்து, இந்தப் பாத்திரத்தில் பானம்பண்ணக்கடவன்." (1 கொரிந்தியர் 11:28)

மற்றவர்களை சோதிக்க வேண்டிய அவசியம் எனக்கு இல்லை என்பதற்காக நான் மகிழ்ச்சி அடைகிறேன். உண்மையை சொன்னால், என்னை சோதித்தறிவதே எனக்கு ஒரு முழு நேர வேலையாக இருக்கிறது.

அத்தியாயம் 9

அம்சம் 5: பங்கேற்பு

கிறிஸ்துவின் சரீரத்தோடு இருக்கும் உறவை பொறுத்த வரை, இராபோஜனத்தின் அடுத்த அம்சம், *பங்கேற்பு* என்பதாகும். இந்த பகுதியை ஆரம்பிக்க, 1 கொரிந்தியர் 10:17 I மறுபடியும் பார்ப்போம்:

அந்த ஒரே அப்பத்தில் நாமெல்லாரும் பங்குபெறுகிறபடியால், அநேகரான நாம் ஒரே அப்பமும் ஒரே சரீரமுமாயிருக்கிறோம்.

நாம் அப்பத்தில் பங்கேற்கும்போது (வினைச்சொல்) அது இராபோஜனத்தில் நம்முடைய பங்கேற்ப்பாக (பெயர்ச்சொல்) இருக்கிறது. நாம் பங்கேற்கிறவர்களாக இருக்கிறோம். இதற்கு இணையாக, நான் யோவான் 6:53 - 58 I ஆராய விரும்புகிறேன்:

அதற்கு இயேசு அவர்களை நோக்கி: நீங்கள் மனுஷகுமாரனுடைய மாம்சத்தைப் புசியாமலும், அவருடைய இரத்தத்தை பானம்பண்ணாமலும் இருந்தால் உங்களுக்குள்ளே ஜீவனில்லை என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். (வசனம் 53)

இந்த வசனத்தின் குறிப்பு இதோ: ஜீவனின் ஊற்று ஒன்று மட்டுமே உண்டு. அது, இயேசுவின் மாம்சத்திலும் இரத்தத்திலும் மட்டுமே உள்ளது. இப்போது இஸ்ரவேலில் பகுதியாயிருக்கிற, ஆனால் ஒரு காலத்தில் பாலஸ்தீனின் பகுதியாய் இருந்த அரபிய சமுதாயத்தினர் மத்தியில், ரமல்லாஹ் என்ற ஒரு சிறு நகரத்தில் வாழ்ந்து வந்தேன். ரமல்லாஹ்வில் இருந்த போது, அரபிய விசுவாசிகள் கர்த்தருடைய பந்தியில் பங்கேற்கும் போது, ஈநாங்கள் இயேசுவின் இரத்தத்தை குடிக்க விரும்புகிறோம்ா என்று அவர்கள் அரபிய மொழியில் சொல்லுகிறார்கள் என்பதை கண்டு பிடித்தேன். அந்த வார்த்தைகளை அப்படியே பயன்படுத்துகிறார்கள். உண்மையை சொன்னால், இப்படி சொல்வது தான் சரியானது.

கர்த்தருடைய மாம்சத்தை சாப்பிடுவது, அவருடைய இரத்தத்தை குடிப்பது என்று சொல்லும் போது, ஒவ்வொரு மனுஷனுக்குள்ளும் சற்றே தயக்கத்தை உண்டுப்பண்ணணீம் ஏதோ ஒன்று இருக்கத்தான் செய்கிறது. இந்த காரியம் சீஷர்களில் சிலரிடமும் நிச்சயம் இருந்தது. யோவான் 6ல் உள்ள, இந்த வார்த்தைகளை இயேசு சொன்னபோது, அவருடைய சீஷர்களில் சிலர் அவரை பின்பற்றி செல்வதை விட்டுவிட்டார்கள். இப்படிப்பட்ட பேச்சை எங்களால் ஏற்றுக்கொள்ள முடியாதுா என்று அவர்கள் கூறினர். இந்த செயலுக்கு

எதிரிடையாக, தேவனுடைய வார்த்தைக்கும் முன்பாக என்னை தாழ்மைப்படுத்தி, எதினோடு வாக்குவாதம் செய்யாதிருக்க, நான் என்னையே அநேக ஆண்டுகளாக பயிறுவித்து வந்துள்ளேன். என் மாம்சத்தை புசித்து என் இரத்தத்தை பானம்பண்ணினாலொழிய, உங்களுக்கு ஜீவன் இல்லைா என்று இயேசு சொன்னார். அந்த வாக்கியம் உண்மையானது. அதுவே அதற்கு முடிவானது. இதை போன்ற ஒன்றை இயேசு சொல்லும் போது, அவர் சொல்லும் வார்த்தையே அந்த விஷயத்தில் இறுதியானது.

உயிர்த்தெழுதல்

யோவான் 6ன் ஆராய்வை, 54ம் வசனத்தை பார்த்து தொடருவோம்:

என் மாம்சத்தை புசித்து, என் இரத்தத்தை பானம்பண்ணீகிறவனுக்கு நித்திய ஜீவன் உண்டு; நான் அவனை கடைசிநாளில் எழுப்புவேன்.ா

நான் சொல்ல இருக்கும் காரியத்தை உங்களால் பெற்றுக்கோள்ள முடியுமா, இல்லையா என்று தெரியவில்லை ஆனால் உயிர்த்தெழுதலை குறித்து ஆராய்ச்சி செய்வதிலும், தியானிப்பதிலும் அதிக நேரத்தை நான் செலவிட்டுள்ளேன். "சரீரத்தின் உயிர்தெழுதல்" என்ற ஒரு புத்தகத்தை கூட எழுதினேன். காலங்கள் தோறும் இருந்த எல்லா சம்பிரதாய கிறிஸ்தவர்களை போலவே, அப்போஸ்தல

விசுவாச பிரமாணத்தின் அறிக்கையின்படி உள்ள, சரீரத்தின் உயிர்த்தெழுதலில் நான் விசுவாசம் வைத்திருக்கிறேன். தேவன் நமக்கு வேறொரு சரீரத்தையோ, வேறெந்த சரீரத்தையோ கொடுக்கப்போவதில்லை என்பதை விசுவாசிக்கிறேன். அதே சரீரத்தை ஒரு மகிமையடைந்த நிலையில் அவர் நமக்கு தரப்போகிறார். அதை நீங்கள் விசுவாசிக்கிறீர்களா ? இல்லையெனில், உங்கள் வேதத்தில் என்ன எழுதியிருக்கிறது என்று சற்று வாசித்துப்பாருங்கள்.

பல நூற்றாண்டுகளாக மரித்து கிடக்கும் சடலங்களின் பாகங்களை ஆண்டவர் எப்படி சேர்க்கப்போகிறார் ? இறுதியில் இந்த கேள்வியை நீங்கள் கர்த்தரிடத்தில் தான் கேட்க வேண்டியது இருக்கும். ஆனால் என்னை பொருத்த வரை, அவர் இதை நிச்சயம் செய்ய போகிறார்.

நான் சரியாக புரிந்துக்கொண்டதுண்டானால், இந்த வசனத்தில் ஆண்டவர் சொல்கிறது இது தான்: நிபந்தனைகளை நிறைவேற்றி நீ அப்பத்திலும் பாத்திரத்திலும் விசுவாசத்தினால் பங்கேற்கும் போது, ஏதோ ஒன்று உன் சரீரத்தில் நிகழ்ந்து, நான் அதை உயிர்தெழ வைப்பேன் என்ற உறுதியை அளிக்கின்றார்.

நாம் மாற்றப்படுவோம்

இதைத் தான் நான் விசுவாசிக்கிறேன்.

விசுவாசத்தோடு இராபோஜனத்தில் பங்கேற்கும் போது, அந்நேரத்திலிருந்து, கர்த்தருடைய சரீரத்திலும் இரத்தத்திலும் ஒரு போதும் பங்கேற்காத ஒருவருடைய சரீரத்திலிருந்து, உங்கள் சரீரம் முற்றிலும் வேறுப்பட்டதாய் மாறுகிறது. பிரதான தூதனாகிய காபிரியேலுக்கு எக்காளம் ஊதும் படி கர்த்தர் கட்டளையிடும் நொடி வரும் - கிறிஸ்துவுக்குள் மரித்த யாவரும் எழுந்திருக்கும் படி அவன் சத்தமிடுகிற நொடி அது. அந்த நொடியில், உங்கள் சரீரத்தின் ஒவ்வொரு சிறிய பகுதியும் - அது எங்கே அல்லது எப்போது சிதறடிக்கப்பட்டிருந்தாலும் - எல்லாம் ஒன்று சேர்ந்து ஒரே சரீரமாக மாறும். நீங்கள் ஒரு புதிய, மகிமையடைந்த சரீரத்துடன் புறப்பட்டு வருவீர்கள். அது மகிமை அடைந்ததால், அது புதியது ஆனால் உயிரோடு இருந்தபோது உங்களுக்கு இருந்த ஒவ்வொரு அவயவங்களும் அதற்கு மீண்டும் அளிக்கப்படுவதால், அதே சரீரமாகவே கர்த்தருடைய சரீரத்திலும் இரத்தத்திலும் பங்கேற்பதே, என்னைப் பொறுத்த வரை, உயிர்தெழுதலின் உறுதியாய் இருக்கிறது. யோவான் 6:54ல் உள்ள வசனம் கூறுவது போல:

"என் மாம்சத்தை புசித்து, என் இரத்தத்தை பானம்பண்ணுகிறவனுக்கு நித்திய ஜீவன் உண்டு;"

என் நன்பனே, இதை கவனித்து பார்

"பெறுவான்" என்று இங்கு சொல்லவில்லை; "உண்டு" என்று சொல்லியிருக்கிறது.

...நான் அவனை கடைசிநாளில் எழுப்புவேன்.

இது இயேசுவால், நமக்கு நேரடியாக அளிக்கப்பட்டுள்ள உறுதி.

வேதனைகளை சந்தித்தல்

என் முதல் மனைவி, லிடியா கர்த்தரால் பரம வீட்டிற்கு அழைக்கப்பட்டபோது, எனது கிறிஸ்தவ அனுபவங்களிலேயே, அது மிகவும் கடின மானதாயும், கசப்பானதாயும் இருந்தது. என் அருமையான நண்பரே, மரணம் என்பது உண்மை. அது அழகான ஒன்றல்ல. அது கொடூரமானது. மரணத்தை குறித்து பதில் அளிக்காத எந்த மதமும், மனுக்குலத்தின் தேவைகளை சந்திக்கக்கூடியது அல்ல. அப்படிப்பட்ட பதிலுடைய ஒரே மதம் கிறிஸ்தவம் மட்டுமே.

லிடியாவின் பரம அழைப்பின் போது, நான் முப்பது ஆண்டுகளுக்கும் மேல் ஒரு பிரசங்கியாராக இருதிருந்தேன். அந்த கடினமான நொடியில், நான் பிரசங்கித்து வந்ததை விசுவாசிக்கிறேனா ? உயிர்தெழுதல் உண்டென்று பிரசங்கித்துள்ளேன் - ஒரு மறு சேர்ப்பு உண்டென்று பிரசங்கித்தேன். அதை நான் நம்புகிறேனா ? என்று என்னையே கேட்டுக்கொள்ள வேண்டியதாயிருந்தது. அதை

ஆழமாகவும், கவனமாகவும் சிந்தித்து பார்த்தேன். சிந்தித்த பின் ஆம், உண்டென்று விசுவாசிக்கிறேன் என்று என்னிடம் நான் கூறிக்கொண்டேன். அதை நான் விசுவாசிக்கவில்லையென்றால், இறுதியில் நான் நம்பிக்கையற்றவனாய் இருந்திருப்பேன்.

கிறிஸ்துவில் விசுவாசிகளாய் இருக்கும் நமக்கு நெருங்கின மற்றும் அன்பானவர்கள் மரிக்கும் போது நாம் துக்கம் அடைகிறோம். ஆனால், உலகத்தைபோல் அல்ல, ஏனென்றால் உலகம் நம்பிக்கையில்லாமல் துக்கிக்கிறது. நமக்கோ நம்பிக்கை உண்டு. நீதிமான்களாகிய நமக்கு, அவருடைய மரணத்தினால் நம்பிக்கை உண்டு. வாழ்வில் உண்டாகும் எந்த அனுபவத்திலும், ஒரு வாழ்க்கைத்துணையை இழக்கும் அனுபவம் மிகவும் வித்தியாசமானது. உங்கள் சொந்த மாம்சமும் இரத்தமும் உங்களிலிருந்து கிழித்தெடுக்கப்படுவதற்கு சமானம். இந்த செய்தியை தவிர, வேறொன்றும் நமக்கு அப்படிப்பட்ட அனுபவத்தை கடந்து வர உதவாது. வாழ்வில் இக்கட்டுகள் வரும்போது, எவ்வளவு அதிகமாக நாம் கர்த்தருடைய பந்தியில் பங்கேற்கிறோமோ, அவ்துவாய் நாம் ஆழமான சமாதானத்தை பெறுவோம்.

நம்முடைய ஜீவ ஊற்று

யோவான் 6ம் அதிகாரத்தின் ஆராய்வை

தொடர்வோம். 55 மற்றும் 56ம் வசனங்களை கவனிப்போம்:

”என் மாம்சம் மெய்யான போஜன மாயிருக்கிறது, என் இரத்தம் மெய்யான பானமாயிருக்கிறது.என் மாம்சத்தைபுசித்து, என் இரத்தத்தைப் பானம்பண்ணுகிறவன் என்னிலே நிலைத்திருக்கிறான், நானும் அவனிலே நிலைத்திருக்கிறேன்.” வசன ங்கள் 55-56

இயேசு இங்கு சொன்னதை தொடர் நிகழ் காலமாக நாம் மொழிப்பெயர்க்கலாம்: ளஎன் மாம்சத்தை புசித்துக்கொண்டேயிருந்து, என் இரத்தத்தில் பானம்பண்ணிக்கொண்டே இருக்கிற வன் என்னில நிலைத்துக்கொண்டே இருக்கிறான், நானும் அவனில் நிலைத்துக்கொண்டே இருக்கிறேன்.

”ஜீவனுள்ள பிதா என்னை அனுப்பினதுபோலவும், நான் பிதாவினால் பிழைத்திருக்கிறதுபோலவும், என்னை புசிக்கிறவனும் என்னாலே பிழைப்பான்.” வசனம் 57

இயேசு பிதாவை முற்றிலும் சார்ந்த ஒரு வாழ்க்கை வாழ்ந்தார். பிதா அவருடைய ஜீவ ஊற்றாய் இருந்தார். ஆகவே, இயேசு நம்முடைய பாவத்தை ஏற்றுக்கொண்டு, அதினோடு முற்றிலும்

இணைக்கப்பட்ட போது, அவர் அந்த ஜீவ ஊற்றிலிருந்து துண்டிக்கப்பட்டு, அதின் நிமித்தம் மரணமடைந்தார்.

பிதாவாகிய தேவன் எப்படி குமாரனாகிய இயேசுவின் ஜீவ ஊற்றாய் இருக்கிறாரோ, அதேபோல, இயேசு ஒவ்வொரு உண்மையான விசுவாசியின் ஜீவ ஊற்றாக இருக்கிறார். இயேசு பிதாவினால் பிழைத்தது போல, நாமும் அவரால் பிழைக்கின்றோம். நம்முடைய வாழ்வு, அவரோடு தொடரும் நம்முடைய உறவை சார்ந்தது. யோவான் 6ம் அதிகாரத்தின் 58 வசனத்தில், நாம் இந்த அடையாளங்களில் பங்கேற்கும் போது, அந்த ஜீவ ஊற்றில் பங்கேற்கிறோம் என்று இயேசு கூறுகிறார்.

> *வானத்திலிருந்து இறங்கி வந்த ஜீவ அப்பம் இதுவே; இது உங்கள் பிதாக்கள் புசித்த மன்னாவைப்போலல்ல, அவர்கள் மரித்தார்களே; இந்த அப்பத்தைப் புசிக்கிறவனோ என்றென்றைக்கும் பிழைப்பான் என்றார் (வசனம் 58)*

இந்த வார்த்தைகளில் மிகுந்த உற்சாகமூட்டும் பகுதி என்ன தெரியுமா? அவைகள் உண்மை என்பது தான்: வேதாகமத்தை குறித்து எனக்கு மிகவும் பிடித்தது என்ன தெரியுமா? அதின் மிக முக்கியமான சத்தியங்கள், மிகவும் எளிய வார்த்தைகளில் கூறப்பட்டுள்ளன:

இந்த - அப்பத்தை - புசிக்கிறவன் - என்றென்றைக்கும் - பிழைப்பான். இதை தான் இயேசு வாக்குத்தத்தம் செய்கிறார். இது முற்றிலும் உண்மையே.

அத்தியாயம் 10

அம்சம் 6: பகிர்ந்து கொள்ளுதல்

கடந்த இரண்டு அத்தியாயங்களில், நாம் இராபோஜனத்தில் பங்கேற்கும் போது, கிறிஸ்துவின் சரீரத்தோடு நாம் எப்படி தொடர்புடையவர்களாக மாறுகிறோம் என்று நாம் ஆலோசித்து வந்தோம். முதலாவது நாம் அடையாளம் காணுதலை குறித்து பார்த்தோம். நாம் பங்கேற்கும் அப்பமும், திராட்சரசமும், இயேசுவின் சரீரம் என்பதை அறிய நமக்கு பகுத்தறிவு தேவை என்று கண்டோம். அது நம்மிலும், நம்முடைய சக விசுவாசிகளிலும் வெளிப்படும் கிறிஸ்துவின் சரீரமாகவும் இருக்கிறதென்று அறிந்துக்கொண்டோம். அடுத்ததாக, நாம் பங்கேற்பை குறித்து பார்த்தோம். அவருடைய மாம்சத்திலும் இரத்தத்திலும் பங்கேற்பது, அவரில் நாம் என்றென்றும் வாழ உதவுகிறது என்று கண்டோம். இந்த அத்தியாயத்தில், இராபோஜனத்தின் மூலம், கிறிஸ்துவின் சரீரத்தோடிருக்கும் தொடர்பின் 6ம் அமசத்தை குறித்து நாம் பார்க்க போகிறோம்.

அம்சம் 6: இராபோஜனத்தில், மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ளுதல்

இந்த விஷயத்தில், நாம் முன்வைக்க போகும் முதல் குறிப்பிற்கு 1 கொரிந்தியர் 10:16ஐ

எடுத்துக்கொள்வோம்.

நாம் ஆசீர்வாதிக்கிற ஆசீர்வாதத்தின் பாத்திரம் கிறிஸ்துவினுடைய இரத்தத்தின் ஐக்கியமாயிருக்கிறதல்லவா? நாம் பிட்கிற அப்பம் கிறிஸ்துவினுடைய சரீரத்தின் ஐக்கியமாயிருக்கிறதல்லவா?

நாம் அப்பத்திலும் பாத்திரத்திலும் பங்கேற்கும் போது, நாம் கிறிஸ்துவின் சரீரத்தை பகிர்ந்து கொள்ளுகிறோம். அதை நம்முடைய எல்லா சக விசுவாசிகளுடனும் நாம் பகிர்ந்து கொள்ளுகிறோம். நாம் ஒரு மிக பெரிய கூட்டத்தின் பகுதியாயிருக்கிறோம் என்பதை நமக்கு நினைப்பூட்டுகிறது.

நாம் ஒரு சிறிய கூட்டமாக இருக்கலாம். நம் சொந்த பார்வையில் நாம் அற்பமாக காணப்படலாம். ஆனால் இராபோஜனத்தின் கோட்பாட்டின் மிக பெரிய ஆவிக்குரிய உண்மையை நாம் உணர்ந்தவர்களாய் அதில் பங்கேற்கும்போது, நாம் சத்தியத்தை அறிந்து கொள்ளுகிறோம். புதிய ஏற்பாட்டில் ஆரம்பித்து, அன்றிலிருந்து இன்றுவரையும், இன்னும் தொடர்ந்து பெருகி கொண்டிருக்கு ஒரு ஜனக்கூட்டத்தின் பகுதியாக நாம் இருக்கிறோம்.

திரையை கடந்து பகிர்ந்து கொள்ளுதல்

நான் இராபோஜனத்தை குறித்து போதிக்கும்

போது, என் ஆங்கிலிக்கன் சபை பின்னணி எனக்கு நினைப்பூட்டப்படுகிறது. ஆங்கிலிக்கன் திருச்சபையில், சகல பரிசுத்தவான்கள் தினம் என்று ஒரு நாளை கொண்டாடுவோம். நான் ஒரு பெந்தேகோஸ்தே கிறிஸ்தவனாக மாறின பின், சகல பரிசுத்தவான்கள் தினத்தையே மறந்துவிட்டேன் என்று வருத்தத்துடன் கூறுவேன். ஆனால் என் மனைவி லிடியா மரித்த பின், அந்த மறதியெல்லாம் நீங்கிவிட்டது. என் வாழ்வில் முதல் முறையாக, நான் ஒப்புக்கொண்ட கூட்டங்களில் என்னால் பிரசங்கிக்க முடியவில்லை. அதற்கு முன் நான் ஒரே முறை வியாதிப்பட்டிருந்தபடியால் பிரசங்கிக்க வேண்டிய கூட்டத்திற்கு போக முடியாமல் ஆகிவிட்டது. ஆனால், அப்படியிருந்த நான், லிடியாவின் மரணத்திற்கு பின், சுமார் மூன்று அல்லது நான்கு வாரங்களுக்கு, "என்னை மன்னித்து விடுங்கள், நான் பிரசங்கம் செய்ய ஆயத்தமாக இல்லை" என்று கூறினேன்.

ஆனால், ஒரு நாள், லிடியா உயிரோடிருந்தால், இப்படி நான் பிரசங்கம் செய்வதை தவிர்ப்பது அவளுக்கு கொஞ்சம் கூட பிடித்திருக்காது என்பதை உணர்ந்தேன்! நான் ஏன் வீட்டில் உட்கார வேண்டும். அவள் இங்கு இருந்தால், நான் வெளியே சென்று பிரசங்கிப்பதையே வாஞ்சிப்பாள்! ஆகவே, எனக்கு அடுத்து இருந்த கூட்டத்திற்கு புறப்பட்டு சென்று விட்டேன். அந்த

கூட்டம், அகஸ்டா, ஜார்ஜியாவில் நடந்த தென் கிழக்கு கரிஸ்மாட்டிக் கத்தோலிக்க ஐக்கியத்தின் கூட்டம். அது பெரும்பாலும் கத்தோலிக்க மக்கள் கூடி வந்த கூட்டம். அங்கு சென்ற போது என்ன கண்டுப்பிடித்தேன் தெரியுமா ? அன்று, சகல பரிசுத்தவான்கள் தினம். அவர்கள் என்ன கொண்டாடிக்கொண்டிருந்தார்கள் தெரியுமா ? கர்த்தருடைய பந்தி - கிறிஸ்துவின் முழு சரீரத்தோடு. வெறும் உலகத்தில் இருக்கிற வர்களோடு மட்டும் அல்ல, அவர்களுக்கு முன் சென்று கடந்து போனவர்களோடும் கூட

லிடியாவின் மரணத்திற்கு பின் நான் பங்கேற்ற முதல் பொது கூட்டம் அது தான். அதை விட ஏற்றதாய் ஒன்றும் இருதிந்திருக்க முடியாது. நான் பல காலமாக அறிந்திருக்க வேண்டிய ஒரு சத்தியத்தின் கண்ணோட்டம், அன்று தான் எனக்கு கிடைத்தது. நான் கண்டுகொண்டது ஏற்கெனவே இது தான்: இவ்வுலகத்தில் இருக்கும் விசுவாசிகளையும், இனி வரும் உலகிற்குள் கடந்து சென்றவர்களையும் பிரிக்கும் திரை, இருளான, கனமான ஒன்றல்ல - அது மிக மெல்லிய திரை. இருளான, கனமான திரை, இந்த உலகத்தில் தான் இருக்கிறது - அது விசுவாசிக்கிறவர்களுக்கும், விசுவாசிக்காதவர்களுக்கும் இடையில் இருக்கும் திரையே.

லிடியாவின் டேனிஷ் பின்னணி

லிடியாவை குறித்து இன்னும் சில சம்பவங்களை சொல்லி இந்த அத்தியாயத்தை நான் முடிக்க விரும்புகிறேன். என் சொந்த வாழ்வின் இந்த சம்பவங்கள், நாம் ஆலோசித்து வந்த அம்சத்தோடு தொடர்புடையவைகள். நான் அறிந்த எல்லா நபர்களிலும் என் மனைவியே மிகவும் தைரியமுள்ளவள். லிடியா மிகவும் வெளிப்படையாக பேசுபவள். காரணமில்லாமல் எதையும் சொல்லமாட்டாள். நான் அவளுடன் வாழ்ந்த எல்லா நாட்களிளும், எந்த காரியத்தையும் உணராமலும், ஒரு வார்த்தைகூட அவள் பேசினதை நான் கேட்டதில்லை. அவள் ஒரு டேனிஷ் பெண்மணி. நீங்கள் ஐரோப்பிய கலாச்சாரத்தை அறிந்தவர்கனால், ஐரோப்பிய கண்டத்திலேயே, டேனிஷ் மக்கள் தான் மிகவும் வெளிப்படையாக பேசுபவர்கள் என்பதை அறிந்திருப்பீர்கள். அவர்கள் எல்லாரிலும் மிகவும் வெளிப்படையாக பேசுபவள், லிடியா !

இப்படி வெளிப்படையாக பேசுகிற ஒரு நபருடன் வாழ்வதற்கு நான் எவ்வளவு அனுசரித்து இருந்திருக்க வேண்டும் என்று நீங்களே புரிந்துக்கொண்டிருப்பீர்கள். அவள் என்னை பார்த்து, "பிரிட்டிஷ் மக்களாகிய நீங்கள், ராஜதந்திரிகளின் தேசமாக இருக்கிறீர்கள். நீங்கள் உண்மையில் என்ன சொல்ல வருகிறீர்கள்

என்பதை யாரும் கண்டுபிடிக்க முடியாது" என்று கூறுவாள். அதை ஏற்றுக்கொள்ள சற்று கடின மாக இருந்தாலும், அது முற்றிலும் உண்மையாக இருந்தது.

இதை நான் மிக ஜாக்கிரதையாக சொல்ல முயற்சி செய்கிறேன். டென்மார்க்கின் லுத்தரன் சபையை விட்டு, லிடியா வெளியேறினாள். அவளுடைய தேசத்தில், பெந்தேகோஸ்தே இயக்கத்தின் முன்னோடிகளில் அவளும் ஒருவராவாள். **38** வயதில், தனக்கு என்ன நிகழ்ந்தது என்று அறியாமலேயே, பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானத்திற்குள் வந்தாள். வேதத்திற்கு கீழ்படியவேண்டும் என்ற வாஞ்சையோடு, தண்ணீரில் மூழ்கி ஞானஸ்நானம் பெறும் சவாலையும் அவள் ஏற்றுக்கொண்டாள். லிடியா செய்த அந்த செயல் மூழு டேனிஷ் நாட்டிற்கும் அவதூறை ஏற்படுத்தியது. (இந்த சம்பவம், லிடியாவின் வாழ்க்கை வரலாறாகிய: எருசலேமில் நியமனம் என்ற ஆங்கில புத்தகத்தில் எழுதப்பட்டுள்ளது.)

உண்மையை சொன்னால், அவளுடைய வழக்கு டேனிஷ் பாராளுமன்றம் வரைக்கும் சென்று, அவள் விசுவாசியாக "மறு ஞானஸ்நானம்" பெற்று, இப்படிப்பட்ட விசுவாச துரோகமாக கருதப்பட்ட ஒரு செயலை செய்த பின்னும், டேனிஷ் அரசு பள்ளியில் ஆசிரியையாக பணியாற்ற அனுமதிக்கப்பட

வேண்டுமா என்று விவாதிக்கப்பட்டது. (குழந்தை ஞானஸ்நாமன் பெற்ற பின், தண்ணீரில் மூழ்கி மறுபடியும் ஞானஸ்நானம் பெறுவது, லூத்தரன் மக்களுக்கு ஒரு பிரச்சனையாக இருந்தது.) சுமார் 50 ஆண்டுகளாக லிடியாவுக்கும், லூத்தரன் திருச்சபைக்கும் ஒரு தொடர் போர் நடந்தது. அவளை ஒரு லூத்தரன் போதகருக்கு அறிமுகம் செய்து வைப்பது, ஒரு காளைக்கு முன் ஒரு சிவப்பு துணியை அசைவாட்டுவதற்கு சமமாக இருந்தது !

இருளில் வெளிச்சம்

லிடியா மரிப்பதற்கு இரண்டு ஆண்டுகளுக்கு முன், கர்த்தருக்குள் எங்களுக்கு மிகவும் பிரியமாய் இருந்த ஒரு சகோதரர் எங்களை சந்திக்க அனுமதி கேட்டார். அந்நேரத்தில், லிடியாவின் வாழ்வில், சில ஆழமான ஆவிக்குரிய பிரச்சனை கள் இருந்தன. அவள் தன் சொந்த இரட்சிப்பையே சந்தேகித்துக்கொண்டிருந்தாள். கர்த்தருக்குள் இருக்கும் அநேக ஆண்களுக்கும் பெண்களுக்கும் இது நடந்ததை குறித்து படித்திருந்தேன், ஆனால் எனக்கு இவ்வளவு நெருக்கமாய் இருக்கும் ஒரு நபருக்கு அது நடக்கக்கூடும் என்பதை அறியாதிருந்தேன்.

எங்களை சந்திக்க வந்த சகோதரன், அறிவை உணர்த்தும் வசனத்தின் வரத்தை அதிகமாக தமது ஊழியத்தில் பயன்படுத்தினவர். மக்களுக்காக

ஜெபிக்கும் போது, அந்த நபரின் குறிப்பிட்ட தேவை, பிரச்சனை அல்லது சூழ்நிலையை குறித்து, அவருடைய மனக்கண் முன் தெளிவான சித்திரம் தெரியும். எங்கள் வரவேற்பு அறையில், நாங்கள் மூன்று பேரும் சற்று நேரம் ஜெபித்த பின், நான் அந்த சகோதரனை பார்த்து, "நீங்கள் எதையாகிலும் காண்கிறீர்களா ?" என்று கேட்டேன்.

"ஆம், காண்கிறேன். ஒரு பெரிய திருச்சபை கட்டிடத்தை காண்கிறேன். அது காலியாக உள்ளது. அதில் வண்ண கண்ணாடிகளும், பாடகர்குழு நிற்கும் மேடையும் உள்ளது. என்று அவர் கூறினார். "இதற்கும் உங்களுக்கும் ஏதாகிலும் தொடர்பு இருக்கிறதா ?" என்று அவர் லிடியாவிடம் கேட்டார். "இல்லவே இல்லை" என்று லிடியா பதிலளித்தாள். "ஒரு நிமிடம் காத்திருங்கள், அது ஒரு லூத்தரன் திருச்சபையாக இருக்குமோ ?" என்று நான் அவரை கேட்டேன்.

"ஆம், அப்படிப்பட்ட திருச்சபையைப்போல் தான் இருக்கிறது" என்று அவர் கூறினார். உடனே நான் லிடியாவை பார்த்து கேட்டேன், "லூத்தரன் திருச்சபையை குறித்து நீ என்ன நினைக்கிறாய் ?" "அவர்களை நான் வெறுக்கிறேன் !" என்று பதிலளித்தாள்.

"ஒருவரையும் நாம் வெறுக்க கூடாது. அதற்கு அனுமதியில்லை. நீ மனந்திரும்ப வேண்டும்"

என்று என் அருமை மனைவிடம் கூறினேன். அவள் மனந்திரும்பினாள் - அவள் வாழ்கையில் அது திருப்பு முனையாக அமைந்தது. அந்த சகோதரனுடன் செலவிட்ட நேரத்திற்கு பின் அவள் இருளிலிருந்து வெளிச்சத்திற்குள் வந்தாள். அந்த அனுபவத்தை தேவனே அவளுக்காக ஏற்படுத்தினார் என்று தான் சொல்ல வேண்டும், ஏனென்றால் இரண்டு ஆண்டுகள் சென்று, அவளை தேவன் தம்மிடம் அழைத்துக்கொண்டார்.

இத்தருணத்தில் நான் ஒரு காரியத்தை சொல்லும்படி விரும்புகிறேன்: நீங்கள் இருளில் இருந்தால், உங்கள் மனநிலைகள் மற்றும் உற வுகளை ஆராய்ந்து பாருங்கள். நீங்கள் யாரையும் வெறுக்கிறீர்களா ? யாரையும் இன்னும் மன்னிக்காமல் இருக்கிறீர்களா ?

பரிசுத்தவான்களுடன் ஐக்கியம்

கதை அங்கே முடிவடைவில்லை. லிடியா மரித்த ஓர் ஆண்டிற்கு பின், ஒவ்வொரு கோடை காலத்திலும், மினியப்போலிஸ் நகரில் நடக்கும் லூத்தரன் கரிஸ்மாடிக் கருத்தரங்கில் பேச அழைக்கப்பட்டேன். அது ஒரு மகிமையான நேரமாக இருந்தது. மூன்று நாட்களுக்கு, சுமார் ஒன்பது ஆயிரம் மக்களுக்கு வேத வகுப்புகளை நான் நடத்தினேன்.

கருத்தரங்கின் முடிவாக, அங்கு கூடியிருந்த

சுமார் 14000 பேர் (எல்லாரும் உட்பட) கர்த்தருடைய பந்தியை அனுசரித்தோம். என் வேலை முடிந்து நான் மேடையை விட்டு இறங்கி வந்த படியால், அந்த கூட்டத்தில் சாதாரண ஒருவனாக, மற்ற மக்களுடன் அமர்ந்து கர்த்தருடைய பந்தியை மகிழ்ச்சியாய் அனுசரித்தேன். கர்த்தரோடும், அவருடைய சரீரத்தோடும், என்னுடைய பந்தியை நான் மிகவும் நெருக்கமாகவும், அந்தரங்கமாகவும் நான் அனுசரிக்க விரும்பினேன்.

இப்படி அந்த லுத்தரன் மக்கள் மத்தியில் முதல் முறையாக உட்கார்ந்து நான் கர்த்தருடைய பந்தியை அனுசரித்தேன். என் வாழ்க்கையில் முன்பு ஒருபோதும் அனுபவிக்காத விதத்தில் - நான் கர்த்தருடைய சரீரத்திலும், இரத்தத்திலும் பங்கேற்கிறேன் என்று அறிந்து பங்கேற்றேன். அதை விசுவாசிப்பது மட்டுமல்ல, அதை நான் அறிந்திருந்தேன்.

நான் சொல்ல இருக்கும் காரியம் உங்கள் இறையியலை கலங்கமடைய செய்யாது என்று நம்புகிறேன். நான் சொல்வதை பெற்றுக்கொள்வீர்களென்று நம்புகிறேன். அந்த லுத்தரன் மக்கள் மத்தியில் அமர்ந்து ஒரு லுத்தரன் இராபோஜன பந்தியில் பங்கேற்றுக்கொண்டிருந்த போது, மகிமையிலிருந்து, லிடியா என்னோடு பேசினது போல உணர்ந்தேன். லிடியா என்னோடு நேரடியாக பேசினாள் என்று நான் சொல்ல

மாட்டேன், ஆனால் நான் உணர்ந்தது இது தான்: அவள் என்னை பார்த்து, "என் சார்பாக நீங்கள் இங்கு இருப்பதை குறித்து நான் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன்" என்று கூறினது போல் உணர்ந்தேன்.

அது எவ்வளவு ஏற்றதாய் இருந்ததென்று அப்போது தான் கண்டேன். நான் மட்டுமல்ல, லிடியாவின் பிரதிநிதியாக, ஒரு அன்பின் செயலாக நான் அந்த இராபோஜனத்தின் மூலம் என் லுத்தரன் சகோதர சகோதரிகளோடு ஒப்புரவானேன் - எனக்காக மட்டுமல்ல, அவளுக்காகவும் அதை செய்தேன். கிறிஸ்துவின் சரீரத்தில் பகிர்ந்துகொள்ளும் இந்த அனுபவங்களுக்கு பின், இராபோஜனத்தின் இந்த அம்சம் எனக்கு மிகவும் உண்மையாக மாறி இருக்கிறது.

நாம் கர்த்தருடைய பந்தியின் ஆராதனையில் பங்கேற்கும் போது, நமக்கு முன் சென்றிருக்கும் பரிசுத்தவான்களும் கர்த்தருடைய மரணத்தின் இந்த நினைவு கூறுதலை நம்முடன் பகிர்ந்துகொண்டிருக்கிறார்கள். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் மரணம் மற்றும் உயிர்தெழுதல். இந்த ஒரு சத்தியம், பல்வேறு காலங்கள், ஜாதிகள், சபை பிரிவுகள், மற்றும் பின்னணியிலிருக்கும் எல்லா விசுவாசிகளையும் ஏன்றிணைக்கிறது.

அத்தியாயம் 11

அம்சம் 7: பிரித்தெடுத்தல்

கர்த்தருடைய பந்தியில் நம்முடைய மறுமொழியும் பங்கேற்பும் என்னவாக இருக்க வேண்டும்? இந்த கேள்விக்குத்தான் பிரதானமாக இப்புத்தகத்தின் வழியாய் நான் பதில் அளிக்க முயன்றுள்ளேன். நான் முன்பு சொன்னது போல, நாம் கர்த்தருடைய பந்தியை அனுசரிக்கும் போது, இயேசு கிறிஸ்துவுடன் ஏழு வழிகள் அல்லது அம்சங்களில் தொடர்பு கொள்கிறோம். நாம் ஏற்கெனவே பார்த்த முதல் ஆறு அம்சங்களின் சாராம்சம் இதோ:

1. அறிக்கை செயதல்: அவருடைய மரணத்தை காணப்பட்ட மற்றும் காணப்படாத தளங்களுக்கு அறிவித்தல்

2. நினைவுகூறுதல்: அவருடைய மரணத்தை நினைவுக்கூறுவது (அவர் சொன்னபடியே)

3. எதிர் பார்த்தல்: அவருடைய வருகையை எதிர்பார்த்தல்

4. அடையாளம் காணுதல்: அப்பம் மற்றும் திராட்சரசத்தின் உண்மையான தன்மையை கண்டறிதல் - அவருடைய சரீரம் மற்றும் இரத்தம்

5. பங்கேற்றல்: அவருடைய சரீரத்திலும் இரத்தத்திலும் பங்கேற்பதால், அவருடைய மரணத்திலும் உயிர்த்தெழுதலிலும் பங்கேற்றல்

6. பகிர்ந்து கொள்ளுதல்: இம்மையிலும் மறுமையிலும் உள்ள எல்லா விசுவாசிகளோடு இராபோஜனத்தின் மூலம் பகிர்ந்துக்கொள்ளுதல்

இப்பட்டியலில் நீங்கள் காண்பது போல, இந்த ஆறு அம்சங்களும், இராபோஜனத்தின் மூலம் இயேசுவோடும் எல்லா விசுவாசிகளுடனும் உள்ள உறவை மையமாக கொண்டுள்ளன. முதல் மூன்று இயேசுவோடு இருக்கும் உறவுடன் தொடர்புடையவை. அடுத்த மூன்று அவருடைய சரீரத்தோடு தொடர்புடையவை. இந்த கடைசி அத்தியாயத்தில், கர்த்தருடைய பந்தியின் ஏழாம் அம்சத்தை நாம் பார்ப்போம். இந்த அம்சம் மற்ற ஆறு அம்சங்களிலிருந்து வித்தியாசமானது, ஏனென்றால், இது இராபோஜனத்தின் மூலம் இயேசுவோடிருக்கும் தொடர்பை குறித்ததல்ல. மாறாக, இராபோஜனத்தை பொருத்தமட்டில், உலகேகாத்தோடிருக்கும் தொடர்பை இது மையமாக கொண்டுள்ளது - குறிப்பாக, அவ்விசுவாசிகளுடன். இந்த ஏழாவது அம்சத்திற்கு நான் தேர்ந்தெடுத்துள்ள பதம், பிரித்தெடுத்தல் என்பதாகும்.

கோடு கிழித்தல்

நம்முடைய ஆராய்வில் முன்பு 1 கொரிந்தியர் 10ம் அதிகாரத்திலிருந்து ஒரு பகுதியை பார்த்தோம். அங்கே பவுல் சபையில் ஒரு கலாச்சார பிரச்சனையை

விவாதித்துக்கொண்டிருந்தார்: பிசாசுகளாகிய தெய்வங்களுக்கு பலியிடப்பட்டவைகளின் இறைச்சியை ஒரு விசுவாசி புசிக்கலாமா? கொரிந்து சபைக்கு பவுல் கொடுத்த பதிலில், நமக்கு சில பயன்பாடுகள் உள்ளன. 1 கொரிந்தியர் 10ல், 20 மற்றும் 21ம் வசனங்களை வாசிப்போம்.

அஞ்ஞானிகள் ப்லியிடுகிறவைகளை தேவனுக்கு அல்ல, பேய்களுக்கே பலியிடுகிறார்களென்று சொல்லுகிறேன்; நீங்கள் பேய்களோடே ஐக்கியமாயிருக்க எனக்கு மனதில்லை. நீங்கள் கர்த்தருடைய பாத்திரத்திலும் பேய்களுடைய பாத்திரத்திலும் பானம்பண்ணக்கூடாதே; நீங்கள் கர்த்தருடைய போஜனபந்திக்கும் பேய்களுடைய போஜனபந்திக்கும் பங்குள்ளவர்களாயிருக்கக்கூடாதே.

நாம் கர்த்தருடைய பந்தியில் பங்கேற்கும் போது, பேய்த்தனத்திற்குரிய எந்த தோற்றம் அல்லது ரூபம் உடைய எல்லாவற்றிற்கும், நமக்கும் இடையில் ஒரு பிரிவினையின் கோட்டை வரைகிறோம் என்ற அர்த்தத்தையே இந்த வசனங்கள் எனக்கு முன்வைக்கின்றன. கிறிஸ்துவைங் கனம்பண்ணாத செயல்கள் மற்றும் எல்லாவித மாந்திரீகத்தின் ஈடுப்பாட்டிலிருந்தும், நம்மை நாமே தூரப்படுத்துகிறோம், இரண்டு இடங்களில், ஒவ்வெரு காலை நாம் வைத்திருக்க முடியாது.

இயேசு கிறிஸ்துவை கனவீனப்படுத்தும் எந்த புத்தகங்களையோ, வெளியீடுகளையோ எங்கள் குடும்பத்தினர் வீட்டிற்குள் வைத்திருக்க விடாமல் நான் கண்கானித்து வர முயன்றுள்ளேன். உபாகமம் 7ம் அதிகாரத்தின் இறுதியில், மோசே இஸ்ரவேல் புத்திரரை பார்த்து, "அவைகளைப்போல நீ சாபத்துக்குள்ளாகாதபடி அருவருப்பானதை உன் வீட்டிலே கொண்டு போகாயாக" (உபா. 7:26) என்று கூறினார்.

அடுத்த முறை நீங்கள் கர்த்தருடைய பந்தியில் பங்கேற்று விட்டு, வீட்டிற்கு செல்லும் போது, வீடு சுத்திகரிப்பு செய்ய வேண்டும் என்று நான் உங்களுக்கு ஆலோசனையாக சொல்ல விரும்புகிறேன். புத்தரை போன்ற சிறிய உருவங்களை வைத்திருக்காதீர்கள். ஜாதகம் அல்லது ராசி பலனிற்குரிய எந்த சின்னங்களையும் வைத்திருக்காதீர்கள். ஏன் என்று புரிகிறதா ? அந்த பொருட்கள் பேய்த்தனத்திற்குரியவைகள் - கர்த்தருடைய பந்தியிலும், பேய்களின் பந்தியிலும் நீங்கள் பங்கேற்கக்கூடாது. நீங்கள் சாத்தானுடைய காரியங்களிலும், கர்த்தருடைய காரியங்களிலும் பங்கேற்க முடியாது.

ஆபிராம் சந்தித்த அதே சவாலை தான் நாமும் சந்திக்கிறோம். இராஜாவின் பள்ளத்தாக்கில், மெல்கிசேதேக்கு ஆபிராமை சந்தித்த போது, மெல்கிசேதேக்கு தனக்கு கொடுக்க

ஆயத்தமாயிருந்த போருட்களுக்கும், சோதோமின் ராஜா வழங்க ஆயத்தமாயிருந்த பொருட்களுக்கும் இடையில், ஆபிராம் தேர்வு செய்ய வேண்டியதாய் இருந்தது. இரண்டிலும் பங்கேற்க முடியாது என்று அவன் மனச்சாட்சி அவனுக்கு அறிவுறுத்தியது. நாமும் அப்படித் தான்.

கலப்படம் இல்லை

இந்த கடைசி குறிப்பை வலியுறுத்தும் ஒரு பகுதியை, நான் எஸ்றாவின் புத்தகத்திலிருந்து முடிவாக வாசிக்க விரும்புகிறேன். பாபிலோனிய சிறையிருப்பிலிருந்து எருசலேமுக்கு திரும்பி வந்திருந்த யூத மக்கள், தேவாலயத்தை திரும்ப கட்டுகிறதை குறித்து எஸ்றா 4ம் அதிகாரம் விவரிக்கிறது. முதல் மூன்று வசனங்களை மட்டும் கவனிப்போம். தேவனுடைய மக்களுக்கும், தேவனுடைய மக்கள் அல்லாதவர்களுக்கும் இடையே இருக்கும் பிரிவினையின் விஷயத்தை அவைகள் மிக தெளிவாக வலியுறுத்துகின்றன.

சிறையிருப்பிலிருந்து வந்த ஜனங்கள் இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருக்கு ஆலயத்தைக் கட்டுகிறார்கள் என்று யூதாவுக்கும் பென்யமீனுக்கும் இருந்த சத்துருக்கள் கேள்விப்பட்டபோது, அவர்கள் செருபாபேலிடத்துக்கும் தலைவரான பிதாக்களிடத்துக்கும்

வந்து: உங்களோடேகூட நாங்களும் கட்டுவோம்; உங்களைப்போல நாங்களும் உங்கள் தேவனை நாடுவோம்; இவ்விடத்துக்கு எங்களை வரப்பண்ணின அசீரியாவின் ராஜாவாகிய எசரத்தோன் நாட்கள் முதற்கொண்டு அவருக்கு நாங்களும் பலியிட்டுவருகிறோம் என்று அவர்களோடே சொன்னார்கள். எஸ்றா 4:1,2

முதல் தருணத்தில், இது நட்புக்குரிய ஒரு செயலாக தோன்றியிருக்கலாம். ஆனால், அப்படி சொன்னவர்களுடைய சரித்திர பின்னணியை நீங்கள் அறிந்திருந்தால், அவர்கள் மிகவும் கலப்பான ஆராதனை முறைகளை கொண்டவர்கள். மோசேயின் நியாயப்பிரமாணம் மற்றும் உடன்படிக்கையின் அம்சங்கள் அதிலிருந்தது. ஆனால் அதே நேரத்தில், பிள்ளைகளை பலியிடுதல் உட்பட்ட பேய்த்தனத்திற்குரிய அம்சங்களும் அதில் இருந்தன.

தேவனுடைய மக்கள், தேவனுடைய வீட்டை எருசலேமில் கட்டுவதை அவர்கள் கண்டபோது, "நாங்களும் உங்களோடே சேர்ந்துக்கொள்வோம். இந்த பணியில் நாங்களும் இணைந்து கொள்ள விரும்புகிறோம்," என்று கூறினார்கள். ஆனால் அந்த அதிகாரத்தின் மீதி பகுதியை நீங்கள் வாசித்தால், அவர்கள் தடையை தான் உண்டு

பண்ணினார்கள் என்று புரிய வரும். ஆகையால், யூத தலைவர்கள் அவர்களுக்கு கொடுத்த பின் வரும் பதிலை நீங்கள் புரிந்துக்கொள்வீர்கள்.

அதற்குச் செருபாபேலும், யோசுவாவும் இஸ்ரவேலில் மற்றுமுள்ள தலைவரான பிதாக்களும் அவர்களை நோக்கி: எங்கள் தேவனுக்கு ஆலயத்தைக் கட்டுகிறதற்கு உங்களுக்கும் எங்களுக்கும் சம்பந்தமில்லை; பெர்சியாவின் ராஜாவாகிய கோரேஸ் ராஜா எங்களுக்குக் கட்டளையிட்டபடி, நாங்களே இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருக்கு அதைக் கட்டுவோம் என்றார்கள். (வசனம் 3)

அவர்கள் சொல்லும் காரியத்தை நான் சுருக்கமாக சொல்லவேண்டுமானால், அதை இப்படி தான் சொல்ல வேண்டும்: "பிரிவினையின் கோட்டை தாண்டி வர முயற்ச்சிக்காதீர்கள். நாங்கள் பேசும் பாஷையே நீங்களும் பேசினாலும், உங்கள் தேவனும், எங்கள் தேவனும் ஒன்றல்ல."

எங்களுக்கு நாங்களே...

எஸ்றாவின் இந்த முடிவில், நான் வலியுறுத்த விரும்பும் பகுதி இருக்கிறது. அதை 3ம் வசனத்தின் கடைசியில் நீங்கள் பார்க்கலாம்:

......ராஜா எங்களுக்குக் கட்டளையிட்டபடி, நாங்களே இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருக்கு

அதைக் கட்டுவோம். . .

"எங்களுக்கு நாங்களே" என்ற செய் தியை இந்த வார்த்தைள் தொகுத்துச் சொல்வதாக நான் காண்கிறேன்.

அத்தியாயம் 12

கர்த்தரின் பந்திக்கு நம்முடைய மறுமொழி

கர்த்தருடைய பந்தியின் ஏழு அம்சங்களையும் நாம் ஆழமாக ஆராய்ந்துள்ளோம். இராபோஜனத்தின் இந்த மிக அழகான மற்றும் புனிதமான சடங்கில் நாம் பங்கேற்கும் போது, இயேசுவோடும், அவருடைய சரீரத்தோடும், உலகத்தோடும் நாம் எப்படி உறவு கொள்கிறோம் என்பதை ஆழமாக புரிந்துகொள்வதே நம்முடைய இலக்காக இருந்திருக்கிறது.

இப்போது, இந்த புத்தகம் முழுவதிலும் நான் கேட்ட கேள்விக்கு நாம் திரும்பப்போகிறோம்: "நம்முடைய மறுமொழி என்னவாக இருக்க வேண்டும் ?" ஒரு வேளை இந்த புத்தகத்தின் வாயிலாக, தனிப்பட்ட விதத்தில், நீங்கள் கர்த்தருடைய பந்தியை அனுசரிப்பதில், இன்னும் அதிக கவனம் செலுத்த வேண்டும் என்ற இடத்திற்கு கடந்து வந்திருக்கலாம். அந்த அர்ப்பணிப்பை, ஆண்டவருக்கு தெரிவிக்க, சற்று நேரத்தில் ஒரு ஜெபத்தை நாம் இணைந்து செய்யலாம்.

ஒரு வேளை லிடியாவைப்போல ஒரு சங்கடமான நிலையில் நீங்கள் இருக்கலாம்

- உங்களுக்குள் இருக்கும் காயங்கள் உங்களை தேவனிடமிருந்தே பிரிப்பது போல தோன்றலாம். நான் லிடியாவை குறித்து சொன்ன சம்பவங்களிலிருந்து, மனந்திரும்புதலே திருப்பு முனையாக அமைந்ததென்று கண்டிருப்பீர்கள். அவள் இருளிலிருந்து வெளிச்சத்திற்குள் வந்தாள். இன்று நீங்கள் இருளில் இருந்தால், நீங்களும் வெளிச்சத்திற்குள் வரலாம்.

கர்த்தருடைய பந்திக்கு நேராக கடந்து வருவதை குறித்து நீங்கள் யோசித்துக்கொண்டிருக்கையில், உங்கள் இருதயத்தில், மனந்திரும்ப வேண்டிய மனநிலைகளை கொண்டிருக்கிறீர்களா ? நீங்கள் வெறுக்கிறவர்கள் யாராகிலும் இருக்கிறார்களா ? நீங்கள் மன்னிக்காதவர்கள் யாரேனும் இருக்கிறார்களா ? தேவனோடே போராடிக்கொண்டிருக்கிறீர்களா ? இந்த காரியங்கள் எல்லாம் சரி செய்யப்பட வேண்டும். இப்போதே அவையெல்லாவற்றையும் ஜெபத்தில் வைப்போம். பின் வரும் ஜெபத்தை செய்து, தேவன் நம்முடைய இருதயங்களை ஆயத்தப்படுத்த கேட்போம்:

பரம தகப்பனே, இயேசு மரணம் அடையும் முன், எங்களுக்கு தந்த இந்த இராபோஜனத்தின் மிக அழகான சடங்கிற்காக நான் ஆழ்ந்த நன்றியை உமக்கு தெரிவிக்கிறேன். இந்த பரிசுத்த பந்தியில் இன்னும் அதிகமாக பங்கேற்க என்னை

அர்ப்பணிக்கிறேன். உம்முடைய மரணத்தை அறிக்கை செய்ய, உம்மை நினைவுக்கூற, உம்முடைய வருகையை எதிர்நோக்க, உம்முடைய சரீரத்தை அடையாளம் காண, உம்முடைய மரணம் மற்றும் உயிர்த்தெழுதலில் பங்கேற்க, எல்லா விசுவாசிகளுடன் பகிர்ந்துக்கொள்ள மற்றும் உலகத்தை பின் தொடரும் எல்லா செயல்களிலிருந்து என்ன பிரித்தெடுக்க, ஒரு வல்லமையான வழியாக இதை நான் அறிந்து பங்கேற்க அர்ப்பணிக்கின்றேன். அதில் பங்கேற்கும் போது, உம்மிடமிருந்து ஜீவனை பெற்று, நீர் எனக்கு அளித்த நித்திய ஜீவனை கொண்டாடுகிறேன் என்பதற்காக நன்றி.

நான் இருளிலிருந்து வெளிச்சத்திற்கு வருகிறேன். என் பாவங்களிலிருந்தும், தவறான மனநிலைகளிலிருந்தும் மனந்திரும்புகிறேன். கல்வாரி சிலுவையில் இயேசு எனக்காக செய்த தியாகத்தின் வழியாய் நான் மன்னிப்பு கேட்கிறேன். இயேசுவின் நாமத்தில் என்னை காயப்படுத்தின் யாவரையும் நான் மன்னிக்கிறேன். உம்மிலும், என் வாழ்விற்காக நீர் வைத்திருக்கும் திட்டங்களிலும் என் விசுவாசத்தை அறிக்கை செய்கிறேன். இந்த இராபோஜன பந்தியில் பங்கேற்கும் ஒவ்வொரு தருணத்திலும், உம்மை சந்திக்க, என் இருதயத்தை இப்போது நான் ஆயத்தம் செய்கிறேன். ஆமென்.

நூலாசிரியரின் பின்னணி

டெரிக் பிரின்ஸ் (1915 - 2003) ஆங்கிலேய பெற்றோருக்கு இந்தியாவில் பிறந்த மகன். இங்கிலாந்து நாட்டின் ஈட்டன் கல்லூரி மற்றும் கேம்பிரிட்ஜ் பல்கலை கழகத்தில், இவர் கிரேக்க மற்றும் லத்தீன் மொழிகளில் அறிஞராக கல்வி பயின்றார். கிங்ஸ் கல்லூரியில், பண்டைய மற்றும் நவீன தத்துவ படிப்பில் அவர் பட்டப்படிப்பை தொடர உதவியும் பெற்றிருந்தார். எபிரெய மற்றும் அரபிய மொழிகள் போன்ற பல நவீன மொழிகளை, கேம்பிரிட்ஜ் பல்கலைகழகத்திலும், எருசலேமிலுள்ள எபிரெய பல்கலைகழகத்திலும் இவர் கற்றுக்கொண்டார்.

இரண்டாம் உலக மகா யுத்தத்தில், பிரிட்ஷ் ராணுவத்தில் பணியாற்றின போது, அவர் வேதத்தை படிக்க துவங்கி, இயேசு கிறிஸ்துவுடன் வாழ்வை மாற்றும் ஒரு அனுபவத்தை பெற்றார். இந்த அனு பவத்திலிருந்து, அவர் இரண்டு முடிவுகளுக்கு வந்தார்: முதலாவது, இயேசு உயிரோடு இருக்கிறார் என்றும்; இரண்டாவது, வேதம் சத்தியமான, நவீன காலத்திற்கும் பொருத்தமுடைய புத்தகம் என்பதே. இந்த முடிவுகள் அவருடைய வாழ்க்கையின் போக்கையே மாற்றின. இதன் விளைவாக, அவர் வேதத்தை ஆராயவும் அதை போதிக்கவும் தன் வாழ்வை அர்ப்பணித்தார்.

வேதத்தை விளக்கி, அதின் சத்தியத்தை மிக தெளிவான மற்றும் எளிய முறையில் விளக்கும் டெரிக்கின் வரத்தினால், கோடிக்கணக்கான ஜன ங்களுடைய வாழ்வில் விசுவாசத்தின் அஸ்திபாரம் போட அது உதவி செய்துள்ளது. சபை பிரிவு சார்பற்ற, குழு பிரிவு சார்பற்ற அவருடைய அணுகுமுறை, அவருடைய போதனைகள் எல்லா இன மற்றும் மத பின்னணிகளிலிருந்து வந்தவர்களுக்கும் பிரயோஜன

மாகவும், உதவுகிறதாகவும் அமைந்துள்ளது.

60க்கும் மேற்பட்ட புத்தகங்களையும், 600 ஒலிபதிவு செய்யப்பட்ட போதனைகள், மற்றும் 100 வீடியோ போதனை பதிவுகளையும் அவர் வெளியிட்டுள்ளார். இவைககளில் பல, 60க்கும் மேற்பட்ட மொழிகளில், மொழிபெயர்ப்பு செய்து, வெளியிடப்பட்டுள்ளன. அவருடைய வானொலி ஒலிபரப்பு அரபிக், சீன மொழிகள் (அமொய், கண்டோனீஸ், மாண்டரின், ஷா ங்காயீஸ், ஸ்வாடோ), க்ரோயேஷிய மொழி, ஜெர்மன், மலகாஸி, மொங்கோலியன், ரஷியன், சமோவன், ஸ்பானிஷ், இந்தோனேசிய பஹாசா மற்றும் டொங்கன் மொழிபெயர்ப்புடன் அனுதினமும் ஒலிபரப்பப்படுகிறன. உலகமெங்கும் இந்த ஒலிபரப்பு இன்னும் அநேக மக்களை சென்றடைகிறது.

“இயேசு வரும் வரை” என்ற கட்டளையை நிறைவேற்றும் விதமாக, டெரிக் பிரின்ஸ் ஊழியங்கள், 140க்கும் மேற்பட்ட நாடுகளில் உள்ள விசுவாசிகளை, போதனைகளை கொண்டு சந்திக்கும் ஊழியத்தை தொடர்ந்து செய்து வருகிறது. உலகமெங்கும், 30 நாடுகளில் உள்ள டெரிக் பிரின்ஸ் அலுவலகங்களின் ஊழியங்களால், இது சாத்தியமாகிறது. இவைகளில் சில முக்கிய அலுவலகங்கள், ஆஸ்திரேலியா, கனடா, சீனா, பிரான்ஸ், ஜெர்மனி, இந்தியா, இந்தோனே சியா, மலேசியா, மியான்மார், நேபாள், நெதர்லாந்து, நார்வே, பாகிஸ்தான், ரஷியா, தென் ஆப்பிரிக்கா, சுவிட்ஸர்லாந்து, யூ.கே., பசிபிக் தீவுகள் மற்றும் அமெரிக்க ஐக்கிய நாடுகளிலும் உள்ளன. இவைகளை குறித்தும், உலகமெங்கும் உள்ள மற்ற இடங்களையும் குறித்து அறிந்துக்கொள்ள, www.derekprince.in என்ற இணையதளத்திற்கு சென்று பாருங்கள்.

உங்கள் ஜெப விண்ணப்பங்கள் அனுப்ப, புத்தகங்கள் வாங்க மற்றும் இதர காரியங்களுக்கு நீங்கள் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

For orders, prayer requests & other enquiries please contact :

DEREK PRINCE MINISTRIES - INDIA
C/o DPM IMPEX
1C, EVR Road, Puthur,
Trichy - 620 017, Tamil Nadu, India.
E-mail: admin@derekprince.in
Phone : 00-91-98430 55414 / 95855 38201

உங்கள் காணிக்கைகளையும், நன்கொடைகளையும் மேலிருக்கும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

You can also send your offerings and contributions towards this ministry to the above address.

Derek Prince Ministries - India

எங்களது இணையதள்த்தில் உங்களுக்காக சிறப்பு சலுகைகள் மற்றும் வெளியீடுகள் காத்திருக்கின்றன. கீழே கொடுக்கப்பட்டுள்ள இணையதள முகவரிக்கு சென்று பாருங்கள்.

www.derekprince.in

ஃபேஸ்புக்கில் எங்களது முகவரி:

Derek Prince Ministries - India
web page has a lot of offers 'n' resources for you.

Visit our web page at:

www.derekprince.in

Find us on Facebook, by typing:
Derek Prince Ministries - India